விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆடி 18 ஜுலை 26 இதழ் 174
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (3-8-86)

## களுவங்கேணியில் படையினரால் நூறு மீன் வாடிகள் தீக்கிரை

(மட்டக்களப்பு நிருபர்)

கல்குடாத் தொகுதியைச் சேர்ந்த களுவங்கேணிக் கடற்கரையிலுள்ள தமிழ் கடற்றொழிலாளர்களின் 100 மீன் வாடிகளைச் சுற்றி வளைத்த பெருந் தொகையான ஆயுதப் படையினர் அவற்றுக்குத் தீமூட்டி எரித்தனர்

நேற்று சனிக்கிழமை அதிகாலை இப்பயங்கர சம்பவம் இடம்பெற்றது.

ஆயுதப் படையினர் மீன்வாடிகளை முற்றுகையிடுவதற்கு முன்னர் அவற்றிலிருந்த கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் சென்றுவிட்டதாகவும், அவர்களின் மனைவிமாரும் உறவினர்களும் அவ்வாடிகளில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(11-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் படையினரின் தாக்குதல் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்படும்

(மட்டக்களப்பிலிருந்து நமது நிருபர்)

தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் ஜனாதிபதிக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் சுமுகமாக இடம்பெற்றுவரும் இக்கால கட்டத்தில் மட்டக்களப்பு பகுதியில் ஆயுதப்படையினர் கண்மூடித்தனமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது குறித்து ஜனாதிபதியின் உடனடிகவனத்திற்கு கொண்டுவரப்படவுள்ளது.

இவ் விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவர் திரு சி சம்பந்தமூர்த்தி நேற்று கொழும்பிலுள்ள கூட்டணிப் பிரமுகர் திரு நீலன் திருச்செல்வத்திடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு பகுதியில் சமீபகால பதற்ற நிலை குறித்து திரு. சம்பந்தமூர்த்தி திரு. நீலனிடம் தெரிவித்த புகார் வருமாறு: "மட்டக்களப்பு மாவட்

(11ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி ஆலோசனை

கொழும்பு, சனி

இந்திய மாநிலங்களில் உள்ளது போல் தமது சொந்த நிதித்துறை விடயங்களை மேற்

(11-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் வைபவத்தில் கலந்தோர் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு, சனி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடியில் அமைச்சர் திரு. தேவநாயகம் கலந்து கொண்ட திறப்புவிழா வைபவங்களில் பங்குபற்றியதாகக் கூறப்படும் பலர் விடுதலை இயக்கமொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் தலைவர் திரு. சம்பந்தமூர்த்தியின் தந்தை சின்னத்தம்பி 70 வயது), சகோதரர் பஞ்சாட்சரம் (சாந்தி ஹோட்

[11-ம் பக்கம் பார்க்க]

## மகாறம்பைக்குள வாசிகளுக்கு ஊர்காவல்படையால் பெரும் அச்சுறுத்தல்

வவுனியா, சனி

எல்லைக்கிராமமான தமிழர் வாழும் மகாறம்பைக்குள மக்களுககு ஊர்காவல்படையினரால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இரவும் நேற்றுக்காலையும் மகாரம்பைக்குளத்திற்கு அப்பால் பெரும்பான்மை மக்கள் வாழும் கிராமம் ஒன்றில் இருந்து ஊர்காவல்படையினர் தமிழர் வாழும் கிராமத்துக்குள் புகுந்து துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர் இதனைத் தொடர்ந்து மகாரம்பைக்குளத்தில் வாழும் தமிழர்கள் அச்சம் காரணமாக கிராமத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. [வா-எ]

## நேரடி மோதல்களை அடுத்து ஆயுதம் கைப்பற்றப்பட்டன

(நமது நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பல இடங்களில் இடம்பெற்ற நேரடி மோதல்களின் பின்னர் இராணுவத்தினரின் பாவனையிலிருநத ஆயுதங்கள், 'சீஸ் டின்கள்' என்பன போராளிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30-ம் திகதி வவனியா மாவட்டத்தில் ஈச்சங்குளத்தில் நடைபவனியாக 200-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் ரோந்து சென்ற பொழுது நேரடி மோதல்கள் தரைக்கண்ணிவெடிச் சம்பவங்கள் இடம் பெற்றது தெரிந்ததே.

இச்சம்பவங்களின் பின்னர் இராணுவத்தினரால் விட்டுச்சென்ற சில இஸ்ரேல் கிறனேட்டுகள், சீஸ்ரின்கள், 5 56 ரக ரவைச் சங்கிலிகள், நிலக்கண்ணி வெடித் தாக்குதலின் போது சிதைந்த நிலையில் ஏ. கே ,ரி 56 எம். 16 ரகதுப்பாக்கிகள் தமது இயக்கப் போராளிகளால் மீட்கப்பட்டதாக விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## "ராஜீவ்" லண்டன் புறப்பட்டார்

புதுடில்லி, ஆகஸ்ட் 2

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி பரிசீலிப்பதற்கான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி இன்று லண்டன் புறப்பட்டார்

இவ்விஜயத்தின்போது அவர் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தட்சரையும் சந்திப்பார். (சி-ஏ)

## மாகாணசபை ஆலோசனைமீது இன்று கலந்துரையாடல்

(கொழும்பு நிருபர்)

மாகாணசபைகள் பற்றிய ஆலோசனை மீது விசேஷ கலந்துரையாடல் இன்று கொழும்பில் நடைபெறும்.

போக்குவரதது அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், ஜனாப் ஏ சி.எஸ். ஹமீட் உத்தேச மாகாண சபைகளின் ஆலோசனைகள்' பற்றியதலைப்பில் உரையாற்றவுள்ளார்கள்.

பல முஸ்லிம் இயக்கங்கள் கலந்துகொள்ளும் இவ்வுரையாடல் நிகழ்ச்சி இன்று காலை மாளிகாவத்தையிலுள்ள இஸ்லாமிய நிலையத்தில் நடைபெறும்.

மாகாணசபை அமைப்பில் முஸ்லிம்களின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதற்கு இதில் முக்கியகவனம் செலுத்தப்படும் அத்துடன் முஸ்லிம் மக்கள்மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களுக்கும் போதிய விளக்கம் அளிக்கப்படும் [ஏ]

## ரயில் நிலையத்தில் கடும் சோதனை

வவனியா சனி

வவனியா ரயில் நிலையத்தில் நடைபெறும் கடும் சோதனையால் பிரயாணிகள் பெரும் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவர் நவீன சப்பாத்து அணிந்திருந்ததால் அவரும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டார். பிஸ்கட் பெட்டிகள் கூட உடைக்கப்பட்டு சோதனை செய்யப்படுகிறதாம். (மா-ஊ-ஒ)

யாழ்ப்பாணம் ——> வவனியா
வவனியா <—— யாழ்ப்பாணம்

**தினசரி பஸ் சேவை**

போக்குவரத்துச் சேவையில் முன்னோடிகளான, யாழ்ப்பாணம் பிள்ளையார் சேவிஸ் ஸ்தாபனத்தாரின் மற்றுமொரு பஸ்சேவை 04-09-86 காலை 8 00 மணிக்கு ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஆசனப்பதிவு:-

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
31. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
போன்:- 23166

R B அக்கிவ் சென்ரர்
நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

வவனியாவில் ஆசனப்பதிவு:-

சிவசக்தி ஸ்ரோர்ஸ்
பிரதான வீதி. வவனியா. [A998]

# ஈழவிளம்பரம்

## விற்பனைக்கு

இறக்குமதி செய்த மீன் சாப்பாடு[Fish Max] மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. M. G. M, 777, K K S Road, and 208, 1st Cross St. Jaffna. Telephone 22611. (A 920)

சிசில் குளிர்சாதனப்பெட்டிகள், சுவர்மணிக்கூடு, சிங்கர் மின்சார, சாதாரண தையல்மெஷின்கள், அன்ரனா. ஓஸ்ரர், பைப்பு, மின்விசிறி Hall set Electric Cooker with Oven, கட்டில்கள், 3 in one கசெற் றேடியோ, Projector, Blender நஷனல் கலர் ரீ வி. மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. சி பத்மநாதன், பிறீ மல்ரி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. [திருநெல்வேலிச் சந்திக்கும் யாழ் மருத்துவ பீடத்திற்குமிடையில்] [C-3793]

திக்கத்தில் பனைகள் வேம்புகள் கொண்ட 7 பரப்புக் காணியும் மூன்று பரப்பு பனைகள் நிறைந்த காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- பூபாலரத்தினம், சதானந்த ஒழுங்கை, அளவெட்டி வடக்கு. [C3794]

சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் 1½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:T அஜந்தகுமார், 7/12, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (C3824)

பல வர்ணங்களில் Love Birds மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: R Selvarajah. No. 2 Swartz Lane, Chundikuli, Jaffna. [C 3828]

லொறி, வான், கார் போன்ற வாகனங்களின் அனைத்து உதிரிப்பாகங்களும் [Second hand] மொத்தமாக உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: S. செல்லத்துரை, 59, மணிக்கூட்டு வீதி. யாழ்ப்பாணம், (C 3840)

சின்னக்கடையில் எல்லா வியாபாரமும் செய்யக்கூடிய சிறந்த இடத்தில் அமைந்துள்ள கடையொன்று உடன் விற்பனைக்குண்டு. அ யோசேப் ஜெனிசியா ஸ்ரோர்ஸ், பாங்சால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம். (C 3842)

முல்லைத்தீவு ஆஸ்பத்திரி வீதிக்கு அரைமைல் தூரத்தில் பஸ்போக்குவரத்துடைய பாதுகாப்பான சூழலில் 48 பரப்பு குடியிருப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதிபகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்பு; அ. டேதுறுப்பிள்ளை, பூம்பதி, தாளைவாய்க்கால், முல்லைத்தீவு அல்லது திருமதி ஜெ. சவுந்தரநாயகம், 93/9, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். [C 3821]

ஷசானி T. V. [K. V. 2032 20''] ரூஇன்வன் கசெற் றேடியோ [போட்டபிள் கொப்போனற் சிஸ்ரம்], மின்சார கேத்தில், ஏசியா சைக்கில் (பெண்கள்), நஷனல் மேசை மின்விசிறி (Three in one), நஷனல் வீடியோ டெக், ரொஷிபா (இரட்டைக் கதவு) பிறிட்ஜ் (Fridge) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு திருமதி V. யோகரத்தினம், இராமேஸ்வரம் லேன், உடுவில் றோட், மானிப்பாய் வடக்கு. [A 997]

## விற்பனைக்கு

மலிவு விற்பனை- 4-8-86 மாவிட்டபுரம் தேர்த்திருவிழா அன்று தெற்கு வீதியில் உள்ள மில்க்வைற் காட்சிச் சாலையில் மில்க்வைற் தயாரிப்புகளை ரூபா 15/-க்கு வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்கும் வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரை விதைகளும், அறிவு நூல்களும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகளை சேகரித்துவைத்திருக்கும் அன்பர்கள் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம் மில்க்வைற், யாழ்ப்பாணம். (A 994)

நாவற்குழி புகையிரத நிலையத்திலிருந்து ½ மைல் தூரத்தில் கேரதீவு றோட்டில் 8 ரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது: க. அன்பலிங்கம், 'பிருந்தாவனம்', நாவற்குழி, கைதடி. (C 3839)

4 பரப்புக்காணியும், 10 அறை வீடும் விற்பனைக்குண்டு நாயன்மார்கட்டுச் சந்திக்கும், கார்பாட்ஸ் அப்பையா வீட்டிற்கும் நடுவில் ஆடியபாதம் றோட்டில் இருக்கின்றது. நேரில் வந்து தொடர்புகொள்ளவும். மா. பாலசிங்கம், ஆடியபாத றோட், நல்லூர். (C 3829)

தற்போதைய சூழ்நிலையில் வீடுகட்டி வசிக்கக்கூடிய ஒன்று அல்லது இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பருத்தித்துறை நகரசபை ஏழாம் வட்டாரம் தொடர்பு: த. திருஞானசம்பந்தர், பிராமண வீதி. தும்பளை, பருத்தித்துறை. (C 3833)

## மணப்பந்தல்

அரச நிறுவனம் ஒன்றில் ரூபா 1600/-மாத வருமானத்தில் முதலாம் தர ஆங்கில சுருக்கெழுத்தாளராகக் கடமைபுரியும் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பட்டதாரியான 30 வயதுடைய அழகிய பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். சீதன விபரம் நேரில் பேசிக்கொள்ளலாம் விண்ணப்பிக்கவும் விளம்பர இல, 3768 C/O, ஈழநாடு, யாழ்ப்பாணம். [-C3768]

இந்து வேளாளர் மூன்று M. B B. S. டொக்டர் மணப்பெண்களுக்கு 32-40 வயதுக்கிடைப்பட்ட டொக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன்ற் மணமகன் தேவை. சீதனம் Sponsorக்கு இடமுண்டு எம்மிடம் எல்லா இன, மதத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் (C 3845)

இந்து வேளாள இனத்தை சேர்ந்த சொந்தத் தொழில் புரியும் 1500/-மாத வருமானமெடுக்கும் படித்த மணமகனுக்கு பெற்றோர் அழகிய மணமகளைத் தேடுகின்றனர் வயது 28 மேலும் விவாகரத்து செய்தோர் தாரமிழந்தோர் ஆகிய மும்மதத்தவர்களின் ஜாதகக் குறிப்புக்களும் எம்மிடமுண்டு. முழு விபரத்துடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். முகவரி:- S. நாகேஸ்வரி, குளப்பிட்டி றோட், கொக்குவில் மேற்கு, கொக்குவில். (C3834)

## வைத்தியம்

நாட்பட்ட சகல நோய்கட்கும விசேட சிகிச்சையளிக்கப்படும் ஜெயந்தி கிளினிக். 218/5, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் (C-3724)

## சேவை

T. V றேடியோ மற்றும் எல்லாவித மின்சார உபகரணங்களையும் திருத்துவதில் சிறம்பான சேவையை நாம் வழங்குகிறோம். டைனமிக் எஞ்ஜினியறிங் லிமிற்றெட், 476, பிரதான வீதி, சுண்டுக்குளி (சென் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக) A 992

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர நிலையத்தில் அண்ணா கோப்பி, அண்ணா தேயிலை, அண்ணா டொபி ஆகிய உற்பத்திப் பொருட்களை வாங்குவதோடு திருவிழாப் பரிசாக இனாம் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா தொழிலகம், இணுவில். A 986

## வகுப்புகள்

108, Brown Road, AL/ 88 பொது இரசாயனம் பிரிவு II ஆரம்பம் 8-8 86 வெள்ளி 4-45 P.m. ஆசிரியர் சத்தீஸ் (திங்கள், புதன், வெள்ளி 4-45 p. m.) C3791

## தேவை

யாழ். நகரில் பிரபல்யமான ஸ்ரூடியோவில் வேலை பழகுவதற்கு இளைஞர்கள் இளம் பெண்கள் தேவை புகைப்படக் கலையில் அனுபவம் ஆற்றல் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வேதனம் வழங்கப்படும். நற்சாட்சிப் பத்திரம் / சான்றிதழ்களுடன் நேரில்வரவும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஞானம்ஸ் ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம். (C 3811)

வேப்பம் விதை, இலுப்பம் விதைகள் தேவை. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற், யாழ்ப்பாணம். [A 995]

அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற வயது 40-50 இடைப்பட்டவர் எமது ஸ்தாபனத்தில் மேற் பார்வையாளராகக் கடமையாற்றுவதற்குத் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்: றிக்கோ ஹோட்டல் 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C3832)

வெளிநாட்டிலும், உள்ளூரிலும், தூர இடங்களிலும் வேலை செய்ய மூன்று மொழிகளும் தெரிந்த பஸ், லொறி சாரதிக்கு வேலை தேவை தொடர்பு கொள்ளவும்: 454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 3801)

உத்தியோகம் பார்க்கும் குடும்பத்தினருக்கு வீட்டையும், பிள்ளையையும் பராமரிக்கக்கூடிய நல்லொழுக்கமுடைய பெண் தேவை. S. மகேந்திரன், 380, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். (C 3800)

### FOR SALE

Sri Lankan Legitimacy Over North and East by Somasundaram, Vanniasingham, Price Rs. 30/- at all Bookstalls. ( C3785)

## விற்பனைக்கு

சப்பாத்துக் கடைக்கு தேவையான தளபாடங்களும் பாதஅணிகளும் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். 15/1. ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை. [C3820]

### CLASSES

Specialist teacher, long standing O/L marking Examiner undertakes private Tution in English Homes visited. Success guaranteed to Enthusiastic Students. Apply No (C-3835) C/o Eelanadu, Jaffna. (C-3835)

## கல்வி

G. C. E. (O/L)ல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கு, ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கு, ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்குக் கற்பிப்பதில் 17 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் வீடுகளிற் சென்று நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும். மற்றும் 6 இருந்து (O/L), (A/L) சகல பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். காலை 8-00 இற்குள் வீட்டில் சந்திக்கவும், அல்லது கடிதத் தொடர்பு கொள்ளவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (C 3716)

இந்தியாவில் தொழில் நுட்பக் கல்வி, உயர் கல்வி பயில விரும்புபவர்களுக்கும், எல்லா London பரீட்சைகளுக்கும் பயிற்சியளித்து பரீட்சை எடுப்பதற்குரிய சகல ஒழுங்குகளும் எம்மால் செய்து கொடுக்கப்படும். ஹரி ஹரன் என்றபிறைஸ், 337, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி. யாழ்ப்பாணம். [C 3837]

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை இராஜேஸ்வரி ஆகிய நான் 31-7-86 வியாழக்கிழமை காலை முல்லைத்தீவில் இருந்து யாழ் வந்த இ. போ. ச பஸ்சில் எனது ஆசிரிய கலாசாலைப் பத்திரம் தவறுதலாக விழுந்து விட்டது. அதைக்கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் எமது விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். இ. வேலுப்பிள்ளை 91/8/2 இந்து மகளிர் ஒழுங்கை கந்தர் மடம். (C 38○0)

## சீ-நோர் ஊழியர் பகிஷ்கரிப்பு

காரைநகர், சனி

காரைநகர் சீ-நோர் நிறுவனத்தில் கடமை புரியும் ஊழியரான நல்லையா படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து அந்நிறுவனத்தில் கடமை புரியும் ஊழியர்கள் கடமைக்கு செல்வதில்லை என முடிவு செய்துள்ளனர்.

தற்போது சீ-நோரில் சுமார் 30 ஊழியர்கள் மட்டும் கடமை புரிகிறார்கள். இவர்கள் நூல் திரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். [சி-இ]

## ஓராண்டு நினைவஞ்சலி



பூபாலசிங்கம் கஜேந்திரன் (பாலா)

தாயின் மடியில்: 21-12-1972

தாயக மண்ணில்: 14-08-1985

பத்தாண்டு தவமிருந்து பெற்றெடுத்தபாலகனே! பரிதவிக்க எம்மைவிட்டுப் பரமனடி சேர்ந்தனையோ? பாராளும் பாவியரின் பண்பற்ற செயலதனால்; பாலா... உனையிழந்து பாரினிலே தவிக்கின்றோம்.

குன்றாக் குலவிளக்காய் குதூகலத்தை எமக்களித்தாய், குமுறும் துயர் வெள்ளத்துளெமை அழுந்த விட்டுச் சென்றாய். குண்டுக் கிரையானாய், 'கூலிப்படை' செயலால் குமுறுதடா எம்நெஞ்சம் பாலா உன்நினைவின்மேல!

ஓராண்டு நினைவு நாளில் பாலாவின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டுகின்றோம். உம் பிரிவால் துயருறும்,

அம்மா, அப்பா, கரம்பன்: அம்மா, அப்பா, அண்ணா தாவடி! பெரியப்பா, பெரியம்மா, தம்பி, தங்கை, உற்றார், உறவினர், நண்பர்கள்.

அல்லைப்பிட்டி-1

03-08-1986 C 3849

## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா, ஜேர்மனி

செல்லவிருக்கும் பிரயாணிகளுக்கு குறைந்த விலையில் தகுந்த பிரயாண ஒழுங்குகள் உடனுக்குடன் செய்து தரப்படும். அத்துடன் பாஸ்போட், பொன்டிங், இந்தியன் விசா, நோர்வே ரிக்கட் சகாய விலையில் செய்து தரப்படும்.

தொடர்பு: வ. நல்லையா, அலவத்தை, அளவெட்டி. (C 3851)

ராஜீவை பிரிட்டனில் கொல்லமுயன்ற—

# சீக்கியர் திட்டமும்

அதை முறியடித்த

# பிரிட்டிஷார் திட்டமும்

" ———

கடந்த ஆண்டில் உலகின் கவனத்தை ஈர்த்த இரு விடயங்கள் இந்தியப் பிரதமர், ராஜீவின் அமெரிக்க-பிரிட்டிஷ் விஜயங்கள் என்ருல் அதைவிட அதிகளவு கவனத்தை ஈர்த்தவை, இவ்விரு நாடுகளிலும் ராஜீவைக் கொலேசெய்யச் சீக்கியர் திட்டமிட்டதும், சி. ஐ. ஏ- ஸ்கொட்லண்ட் யார்ட் புலனுய்வு நிறுவனங்களால் அவை கண்டுபிடிக்கப்பட்டமையும்.

அமெரிக்காவில் ராஜீவைக் கொலேசெய்யத் திட்டப்பட்ட திட்டம்பற்றியும், அதை அமெரிக்கப் புலனுய்வு நிறுவனம் துப்புத் துலக்கியது பற்றியும் மிகப் பெரிதளவில் பிரசாரம் செய்யப்பட்டது. ஆனுல் அவரை இங்கிலாந்தில் கொலேசெய்யத் திட்டப்பட்ட திட்டம்பற்றியும், அதன் தோல்விபற்றியும் தகவல்கள் வெளியிடப்படவில்லே.

இதுபற்றி அறிவதற்காக இந்திய சஞ்சிகையான 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி'யின் ஆசிரியரான திரு. பிரிட்டிஷ் நன்டி இங்கிலாந்து சென்ருர். அவரது தகவல்:-

——— "

அக்டோபர் 14ம் திகதி இந்தியாவின் புதிய பிரதமர் ராஜீவ், இங்கிலாந்துக்கு இரு நாள் விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கின்ருர் அவரை லண்டனில் கொலே செய்யச் சீக்கியர் திட்டமிட்டிருப்பதாக ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிசாருக்குத் தகவல் கிடைக்கின்றது அதைத் தடுக்க அவர்கள் மாற்றுத் திட்டமொன்றைத் தீட்டுகின்றனர்.

## 85 செப். நடுப்பகுதி

தீவிரவாத சீக்கியரான ஜர்னேல் சிங் ரானுவானு (வயது 49) என்பவரை அணுகிய இருவர் ஐரிஷ் கெரில்லாக்கள் எனத் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டனர் கொலேசெய்யப்பட்ட ஐரிஷ் எதிர்க்கட்சி உறுப்பினரான நீவி என்பவரைச் சுட்டது தாங்களே எனவும் தம்மை விளம்பரப்படுத்தினர். ராஜீவைக் கொலே செய்யத் திட்டமிட்டிருப்பது பற்றிக் கூறிய அவர்கள், தாம் அந்தக் கொலேயைச் செய்வதாகவும், தமக்கு 60 000 ஸ்டேர்லிங் பவுண் தரவேண்டுமெனவும் கோரினர்.

## செப்- 24

ரானுவானுவும், இரு 'ஐரிஷ் கெரில்லாக்களும்' 'போஸ்ட் ஹவுஸ் ஹோட்டலில்' சந்திக்கின்றனர். பிரிட்டனின் சீக்கிய சமூகத்தின் ஆதரவுடனேயே தாம் ராஜீவைக் கொலேசெய்ய விரும்புவதாகக் கூறிய ரானுவானு, 'கெரில்லாக்கள்' கேட்ட பணத்தைத் தர ஒப்புக்கொள்கிருர்.

## ஒக்- 2

ரானுவானுவுக்கும் 'கெரில்லாக்களுக்கும்' இடையிலான இறுதிச் சந்திப்பு 'ஃபோர் சீசன்ஸ் ஹோட்டலில்' நடைபெறுகின்றது.

அங்கு ரானுவானு துப்பாக்கி ஒன்றையும் 17 சன்னங்களேயும் 'கெரில்லாக்களிடம் ஒப்படைக்கிருர்.

ஆனுல்......

இரு 'கெரில்லாக்களும்' இந்தக் கொலேயைச் செய்யத் தமக்கு ஒரு லட்சம் ஸ்டேர்லிங் பவுண் தரவேண்டுமென நிர்ப்பந்திக்கின்றனர்

முதலில் கோபமுற்ற ரானுவானு பின்னர் 95 000 ஸ்டேர்லிங் பவுண் தர ஒப்புக்கொள்கிருர்.

(உண்மையில் இப்பணத்தைத் தர ஒப்புக்கொண்ட உலக சீக்கிய இளேஞர் பேரவையின் வங்கிக் கணக்கில் அந்தளவு பணம் இருக்கவில்லே!)

ரானுவானு, சுக்விந்தர் சிங் ஜில் (வயது 30) என்ற இன்னுெரு சீக்கியரை அழைத்துக்கொண்டு, ராஜீவைக் கொலே செய்தவுடன் அநத 'இருவரும்' பத்திரமாகத் தங்கக்கூடிய இடமொன்றை வாடகைக்கமர்த்த லண்டன் செல்கிருர். அத்தகைய இடமொன்றும் வாடகைக்கு அமர்த்தப்படுகிறது.

## ஒக்- 10

ஸ்கொட்லண்ட் பொலிசார் இந்தக் கொலேத் திட்டத்தில் சம்பந்தப்பட்டோரைக் கைது செய்யும் நேரம் வந்துவிட்டது எனக் கருதுகின்றனர்.

## ஒக்-11:

ராஜீவின் பிரிட்டிஷ் பயணத்திற்கு மூன்று தினங்கள் இருக்கின்றன.

ராஜீவை கொலேச் சதிசெய்தனர் என்ற குற்றச் சாட்டில் 14 சீக்கியரும், 3 பாகிஸ்தானிய காஷ்மீர் வாசிகளேயும் ஒரே நேரத்தில் பொலிஸார் கைது செய்கின்றனர்.

## ஒக்-14:

இந்தியப் பிரதமர் ராஜீவ் தமது இருநாள் பிரிட்டிஷ் பயணத்தை மேற்கொண்டு லண்டன் ஹீத்ரோவிமான நிலேயத்தில் வநதிறங்குகிருர்.

## ஒக்-19

கைதான 4 சீக்கியருக் கெதிரான வழக்குலண்டனில் ஆரம்பம் ஏனேயோர் விடுதலே செய்யப்பட்டனர்)

அந்த நால்வர்---

திரு ஜர்னேல்சிங் ரானுவானு (வயது 49) லீசெஸ்டர் நகரின் சீக்கிய வணக்கஸ்தலத்தின் உபதலேவர். பிரபல வர்த்தகர்.

திரு. பர்மாத்மாசிங் மாரிவாஹா 44 வயதுடைய இவர் லீசெஸ்டரில் புடவைஆலே ஒன்றின் உரிமையாளர்,

தொகுப்பு:
**செந்தில்**

ஹர்மிந்தர்சிங்ராய் வயது 31இவரும் அழகு சாதனங்களே விற்கும் கடையொன்றின் உரிமையாளர். ஏனேய சீக்கியரைப் போலன்றி இவர் தாடிவளர்க்கவில்லே ஐரோப்பிய பாணியிலேயே இவர் உடை அணிந்து காணப்படுபவர்.

சுக்விந்தர்சிங் ஜில் இந்த நாலவரில இவரே இளேயவர். வயது 30 புடைவைத் தொழிலகம் ஒன்றில் சாயம் போடுபவராகக் கடமையாற்றினுர்.

## வழக்கு

இந்த நால்வருக்கெதிரான வழக்கு மிகவும் சிக்கலான முறையில் இருக்கக் காணப்பட்டது.

ராஜீவ் பிரிட்டனுக்குச் செல்கையில அவரைச் கொலே செய்ய வேண்டுமெனப் பல சீக்கியர் நினேத்தாலும் அந் நினேப்பை நடைமுறைப்படுத்தவேண்டுமெனத் தூண்டியது இந்த 'ஐரிஷ் கெரிலாக்களே' என்றும் அவர்களில்லாவிட்டால் இத்திட்டம் தீட்டப்பட்டிராது எனவும் சந்தேகநபர்களின் தரப்பில் சர்ச்சிக்கப்பட்டது.

ஆனல்......

ராஜீவை எப்படியும் கொலே செய்யத் திட்டம் தீட்டப்பட்டது என்பதற்கு உண்மையெனவும்இந்த இரு 'ஐரிஷ் கெரில்லாக்கள்' இல்லாவிட்டாலுங்கூட திட்டம் நிறைவேறறப்பட்டிருக்குமெனவும் அதனேத் தடுத்தது இந்த இருவரே. அரச தரப்பில் வாதாடப்பட்டது.

## யார் அந்த இருவர்?

ஆமாம், யார் இந்த இரு 'ஐரிஷ் கெரில்லா'க்களும்?

ராஜீவைபிரிட்டனில் கொலே செய்ய சீக்கியர் எண்ணியுள்ளனர் என்ற தகவல் ஸ்காட்லான்ட் யார்டுக்குக்கிடைத்தவுடன் அத்திட்டத்தை முறியடிக்க ஸ்காட்லண்ட்யார்டைச் சேர்ந்த இந்த இருவரையும் பொலிஸார் அனுப்பினர்!

அத்துடன் அவர்களின் நலன் கருதி அவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லே. அவர்கள் ரானுவானுவுடன் நடத்திய பேச்சுக்களின் உரையாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடா சமர்ப்பிக்கப்பட்டது. அத்துடன் நீதிமன்றில் அவர் ரொம்பி, ஐயன்-எஸ் எனவே குறிப்பிடப்பட்டனர்.

4 நாட்களாக நடைபெற்ற வழக்கின் பின்னர்......

நால்வர் விடுதலே செய்யப்பட்டனர்!

ஆனுல்.........

சந்தோஷக்களிப்புடன் நால்வரும் நீதிமன்றை விட்டு வெளிவருகையில் ஹர்மிந்தர் சிங் ராயைத தவிர ஏனேய மூவரும் மீண்டும் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்கள் மூவரும் மீண்டும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த விஷயத்தில் அனேவரையும் புதிர் போட வைத்த விஷயம் என்னவெனில், ராஜீவின் பிரிட்டிஷ் பயணம பற்றி அனேத்து விஷயங்களேயும் ரானுவானு துல்லியமாக அறிந்திருந்ததே லண்டனிலுள்ள இந்தியத் தூதராலயத்தில் உயர்மட்டத்தில் சீக்கியரின் உளவாளி ஒருவர் இருக்கலாமென்ற சந்தேகத்தை இது கிளப்பியது ரானுவானுவும் விசாரணைகளின்போது ராஜீவின் பிரயாணத் தகவல்கள் இந்தியத் தூதரகங்களூடாகவே தமக்குக் கிடைத்தது எனக் கூறினுர்.

மூவரையும் சிறையில் சந்தித்த திரு நன்டி மூவரும். தாங்கள் உண்மையில் ஒரு குற்றமும் புரியவில்லேயெனவும், இந்தியப் பிரதமரை 'திருப்திப்படுத்து'வதற்காகவே பிரிட்டிஷ் அரசு தம்மை வீணுக சிறையிலடைத்து வைததிருக்கிறது எனவும் கூறியதாக கூறுகிருர். அத்துடன் மூவரும் பயந்த நிலேயில் இருப்பதாகவும், தமக்கு விடுதலேகிடைக்கும் காலத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் கூறுகிருர்.

அந்தக் காலம் வருமா?

— நன்றி
இல்லஸ்ட்ரேடட் வீக்லி

---

'பெரி'ஸ்கோப் —

# அவதாரங்கள்!

**1983-ல்** நாங்கள் நிதானமாக நடந்து கொண்டிருந்தால் இவ்வளவு அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்காது...

இப்படிச் சொல்லியிருப்பவர் காணி மகாவலி அமைச்சர் காமினி திஸநாயக்கா.

மாத்தளே அலுவிகாரை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் இதே காமினி இதுமட்டுமா கூறினுர்? 83 கலவரங்களால் வடக்குக்கு இடம்பெயர்ந்த மலேயகத் தமிழர் யாழ்ப்பாண மக்களுடன் தோளோடு தோள்சேர்ந்து நிற்கிருர்களாம் என்றும் ஆதங்கப்படுகிருர்! அடித்துக் கலேத்தபோது வராத தாபம் இன்று கோபமாக மாறிவிட்டதோ?

நிதானமாக நடந்துகொண்டால்... அரைகுறையான ஏக்கமென்ருலும் அங்கு ஆழமான நோக்கத்தை அல்லது அதை எட்டமுடியாத ஏக்கத்தை இனங்காண முடிகிறது.

ஆனுல்...

கண்கெட்டபிறகு சூரியநமஸ்காரம் எதற்கு? மகாவலிப் பிரதேசத்துக்கென வெளிநாட்டாரிடம் தண்டி வாங்கிய நவீன குடாரங்களே வடமுனேக்குக் கொண்டுவந்து குடியமர்த்திய நவீன ''கெமுனு'' களுக்குத்தான் இந்தக் கேள்விக்கான பதில் தெரியககூடும். கெட்டபெயர் வாங்கியவர் வழக்கம் போல அந்தப் பிக்குவானுலும் தப்பித்துக்கொண்டு 'நல்லபிள்ளே' களாய் நடிப்பவர்கள் இந்த நவீன 'கெமுனு'க்கள் தான்!

என்னதான் இருந்தாலும், புத்தத்தின் காவலர்களான பிக்குகளேத் தமது கைப்பிள்ளேகளாய் வைத்துக் காரியம்பார்க்கும் அந்தக் 'கண்டிய' மிடுக்கு இன்னும் போகவில்லேத்தான் போலிருக்கிறது!

மண்டையில் மயிரில்லாவிட்டாலும் அதற்குள் மூளேயிருக்கின்றது என அறிந்த பெரியார்கள் சிலர் கூட்டங்களுக்குத் தடைவிதித்தமை ''குட்டிநாய்க்கும் குழந்தைப் பிள்ளேக்கும் இடம்கொடுக்கக்கூடாது'' என்ற சாத்திரத்தை அறிந்ததனுல்தானே?

இந்தளவு அறிவுபடைத்த ''ஜீனியஸ்கள்'' கூட 'நவீன கெமுனுகளே' நம்பியிருப்பதும், அவர்களேத் தமது வாரிசுகளாக்க நினேப்பதும் ஐக்கியத்துக்கும் தேசியத்துக்கும் ஏன் அவர்தம் கட்சிக்குமே குழிபறிப்பதாய்த்தான் அமையும்!

சுகீஸ்வரர் படைத்த சுரேன்களும் சூர்யாக்களும் இருக்கும்போது கேவலம் அணில்களும், ரணில்களும், எலிகளும் எம்மாத்திரம்?

ஆனுல்...

இந்த ஈழத்தின் தலேவிதியை நிர்ணயிப்பது நிர்ணயிக்கப்போவது மக்களே! மக்கள்கூற்றே மகேஸ்வரன் கூற்றென்று சொன்னவர்கள்கூடத் தடுமாறும் நிலேயில் மீண்டும்நாம் சுகீஸ்வரர்களிடம்தான் தஞ்சமடைய வேண்டுமா?

தெரியாமல்தான் கேட்கிறேன் - எமையாளும் ஈஸ்வரனுக்கு எத்தனே அவதாரங்கள்?

---

## இலகுவாய்த் தெரியுதே இது

சுட்டது புலிக்கு, பட்டது புளிக்கு
டொட்டொட்... டொடடோம்... புளிதான் சாயுது!
'புலிக்குச் சுட்டது புளிக்குப்பட்டது.
இலக்கு மாறிப்பட்டது' என்றுதீர்,
இலக்கு மாறிவிட்டது காணும்!
லகர ளகர பேதம் இல்லே.
இலகுவாய்த் தெரியுதே இது இனபேதம்!

— சத்தியசீலன்.

## தையல்நாயகி திருப்பள்ளி எழுச்சி

உனேப்போற்றக் கல்வி தந்தாய்! மற்றவர்கள் தமக்கே
உதவவெனப் பொருள் தந்தாய்! நலிந்தோர்கள் தமக்கே
தினேப்போதும் தாமதியா துதவிதனேச் செய்யத்
தீரத்தைத் தந்திட்டாய் அம்மாநீ! நாமோ
வினேப் பயனுல் எய்துமிடர்விளக்கிடவும் ஆமோ?
சிவனுலகைக் காட்பவளே தையல்நாயகியே
நினேப்பெல்லாம் நீயாக நாம் வணங்கல்செய்தோம்!
நீடு புகழ் கொண்டவளே பள்ளி எழுந்தருளாய்.

— ம. பார்வதிநாதசிவம்.

★ இன்று வண்ணே தையல்நாயகி அம்பாள் ஐந்தாம் திருவிழா. பகல் மஞ்சம், இரவு இடப வாகனத்துடன் சப்பரம்.

# "பயணங்கள் தொடர்கின்றன"

அண்மையில் ரி. வி. திரைப் படமொன்றைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. 'ஆனந்தாலயம்'' சார்பில் ஜீவா நாவுக்கரசன் தயாரித்து இதனை அளித்திருந்தார் அவர் பூமணியென்ற பத்திரிகையைத் தொடர்ந்து 1970 முதல் 77வரை ஏழு ஆண்டுகள் நடாத்திய பத்திரிகையாளர், எழுத்தாளன் சிறந்த மேடை வானொலி நடிகர், இயக்குநர் எல்லாத்துக்கும் மேலாக ஒரு கவிஞர் அவர் பல துறைகளிலும் கைதேர்ந்தவர் என்பதை இந்த படத்தின் மூலம் நிரூபித்திருக்கிறார். கதை, வசனம் பாடல்கள், நெறியாள்கை ஆகிய நாலு துறைகளிலும் பாராட்டுப் பெறுகிறார். இன்றைய சமூகத்தில் நடக்கும் சர்வ சாதாரண சம்பவங்களை வைத்து சிறந்த ஒரு கதையை உருவாக்கி அதிலும் பாராட்டுப் பெற்றிருக்கிறார்

சாதி, சமயம். சீதனப் பிரச்னைகளை சிறிது தொட்டு இன்று வெளிநாடு அனுப்பும் போலி ஏஜென்ஸிகளின தில்லுமுல்லுகளை மையமாக வைதது கதையை உருவாக்கியிருக்கிறார். அழகும் இளமையும் உள்ள பெண்களைத் திருமணம் செய்த சில நாடகளில் கணவன் பிரியக் கூடாது பிரிந்தால் என்ன நடக்குமென்பதே கதையின் ஜீவநாடி. கதையைச் சித்தரிக்க போதிய சம்பவங்கள் நிறைய அமையாதது ஒரு பெரிய குறையாக இருந்தாலும் காண்பிக்கும் சம்பவங்களை வைத்து கவனமாகச் சிந்திப்போருக்கு கதைஇலகுவாகப் புரிந்து விடுகிறது.

காலத்திற்கேற்ற கதை சம்பவங்கள் எங்கள் வீடுகளில் நடந்துவிடக் கூடாதே என்று ஏங்கும் போது எதிர்பாராமல் எங்களில் ஒருவர் வீட்டில் நடந்து விட்டது போன்ற உணர்வைக் கதை ஏற்படுத்துகின்றது. நடிப்பிலும் ஜீவா நாவுக்கரசனே முன்னணியில் நிற்கிறார். அவரின் யுதாஸ் நடிப்பு அபாரம் அவர் மனைவி பாக்கியம் கந்தசாமி சிறந்த ரி. வி. நடிகை உதயத்தில் அஸ்தமனம்'' என்ற ரூபவாஹினி தயாரித்த தமிழ் நாடகத்தில் நடித்துப் பலராலும் பாராட்டுப் பெற்றவர். இவர்கள் இருவரும் தோன்றும் காட்சிகளில் இயல்பான பேச்சும் சிறந்த படப்பிடிப்பும் பாராட்டும்படியாக அமைந்துள்ளது. அடுத்து மனதில் நிற்பவர் வில்லனாக நடித்த வி. எஸ். குமாரசுவாமி. இவர் சிறந்த சினிமா நடிகர். ஈழத்து சினிமாப் படங்களில் நடித்து அனுபவம் பெற்றவர். இதில் நிறைய சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் கொடுத்த பாத்திரத்தை கச்சிதமாகச் செய்து பாராட்டையும் பெறுகிறார். கதாநயகியும் கதாநாயகனும் தோன்றும் காட்சிகள் ரம்மியமாகவும், கவர்ச்சியாகவும் இருக்கின்றன. இவர்களுக்கு போதியளவு நடிக்கும் சந்தர்ப்பம் கொடுபடவில்லை என்றுலுந் தோன்றும் இடங்களில் பார்ப்போர்மனதைக் கவர்ந்து விடுகிறார்கள்.

சமுதாயத்தை திருத்தும் வாலிபர்களாக மூவர். இவர்கள் போலி ஏஜன்சிக்களால் ஏமாற்றப்பட்டு நாட்டுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள். இவர்கள் சொல்லும் கதைகள் விளங்கும்படியாக இல்லை. அவர்கள் அக்கறை எடுத்திருந்தால் இன்னும் சோபித்து இருக்கலாம். படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணம் படப்பிடிப்பாளர் தேவனும், படத்தொகுப்பு மகாதேவனும், இவர்களை இயக்கிய டிங்கரி கனகலிங்கத்திற்கு ஒரு சபாஷ். படப்பிடிப்பு பிரமாதம்.

முத்தான மூன்றுபாடல்கள். பொன்னுத்துரை இசை அமைத்து, ரங்கன், வரதன் முதலியோரின் உதவியுடன் பாடல்களைப் பதிவுசெய்திருக்கிறார்கள். பாடல்கள் கேட்க இனிமையாகவும் மனதில் பதியக்கூடியதாகவும் நல்ல கருத்து செறிவு உள்ளதாகவும் அமைந்துள்ளன.

பார்வையாளர்கள் ஒருசில குறைகளை உணர்ந்தாலும் பல லட்சம் செலவுசெய்து எடுக்கும் தென்இந்திய திரைப் படங்களோடு இதை ஒப்பிடாவிட்டால், ஒரு நல்ல படத்தை பார்த்த நிறைவு அவர்கள் மனதில் தோன்றும் என்பதில் ஐயமில்லை.

மொத்தத்தில் இதுவரை யாழ்ப்பாணத்தில் எடுத்து, திரையிடப்பட்ட ரீ வீ. திரைப்படங்களில் 'பயணங்கள் தொடர்கின்றன' பல துறையிலும் ஒரு முன்னோடியாகவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு வெற்றி என்றும் துணிந்து கூறலாம்.

— ஏ. வி. எம்.

## தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த உதவியாளாகள் (Helpers), குமிழர்கள் (Bubblers), ஆகியோரும் வெட்டும் பகுதி (Cutters) யில் கடமையாற்றக்கூடிய அனுபவமுள்ள பெண்களும் தேவை.

ஆகஸ்ட் 4ம், 9ம், திகதிகளில் காலை 9மணி முதல் பகல் 12 மணி வரை சான்றிதழ்களுடன் கீழ்க்கண்ட முகவரிக்கு சமுகம் கொடுக்கவும்.

தெரிவு செய்யப்படுவர்களுக்கு இலவச தங்குமிடமும் குறைந்த சலாரில் சாபபாட்டு வசதிகளும் வழங்கப்படும்.

### த பெனின்சுலா குறூப்

மகேந்திரா கண்ணாடி தொழிற்சாலை

இல. 9 கண்டி வீதி,

நாவற்குழி.

[A 1019]




விலை ரூபா ·45/- க்கு மேல

- கேசச் சாயத்துறையில் ஒரு நூற்றுண்டு அநுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இன்று உலகம் முழுவதிலும், இலங்கையிலும் பெரும்பான்மையானோர் உபயோகிக்கும் ஒரே கேசச் சாயம்.
- சாயம் பூசியபின் எண்ணெய், சவர்க்காரம் ஷம்பு எதனையும் பயமின்றி உபயோகிக்கலாம்.
- உங்கள் கேசத்திற்குப் பொருத்தமான மூன்று வர்ணங்கள், ஷாம்பு வடிவமுட்பட.

உங்கள் கேசத்தினைப் பராமரிப்போர்

ஏக இறக்குமதியாளர்கள்;

TC ராதா டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்

25, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. தொலைபேசி: 36860

REWARD

P Vishnuthasan of No. 71, Stanley Road, Jaffna is willing to pay a reward to anyone giving the whereabouts of Mr. Thambirajah Thurairajah whose last place of residence was at Thambiravilla, Waikall, Dankotuwa and formerly of Rodrigo Place, Mattakuliya, Colombo-15 and presently understood to be in Kotahena, in connection with court cases relating to recruitment for foreign employment.

(C-3836)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND)
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

### டென்மார்க்

கொழும்பிலிருந்து நேரடிப்பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். (A-1029)

கப்பலில் செல்வதற்கு

## பிரயாண ஒழுங்குகள்

கப்ரின் ஒபிசர் 1, ஒபிசர் 2, ஒபிசர் 3, எஞ்சினியர் 1, எஞ்சினியர் 2, எஞ்சினியர் 3, எஞ்னியர்4, றேடியோ ஒபிசர், எலற்றீசியன், போசன், குக், ஒயிலர் (ஏ.வி) (A. B)

ஆகியோர்க்கு உடன் பிரயாணவசதிகள் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் பெய்ரூட்டில் பொதுவேலையாளர்கட்கு 15 நாட்களில் பிரயாண வசதிகள் செய்துகொடுக்கப்படும். கடவுச்சீட்டுடன் மூன்று புகைப்படங்களுடன் நேரில் வரவும்.

பாஸ்போட், பொண்ட் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

நியூ மரியா
சிப்பிங் அன் ரவல்

185/3, நியூ லலிதா பில்டிங்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [A-1027]

HOTEL GNANAM'S

(Under new Management)
Relax at the Beer Garden



★ பாதுகாப்பான இடம் ( BEER 32/- )
★ ரம்மியமான சூழல்
★ மிகவும் குறைந்த விலையில்
★ அன்பான உபசரிப்புடன்
★ A/C or non A/C அறைகள்

Chinese உணவுகளுடன்

தினமும் காலை 9-00 முதல் மாலை 11-30 வரை சேவை செய்யக் காத்திருக்கிறது:

HOTEL GNANAM'S

299, CLOCK TOWER ROAD, JAFFNA,
Telephone: 22082 — 23067 (A1028)

# மாகாணசபை சமாச்சாரம்

அ, ஆ வுக்கு மேல் எனது இளைய மகன் படிப்பு நகர வில்லை என ஒரு தகப்பனர் குறைபட்டுக்கொண்டார். இடையிலே குறுக்கிட்ட மூத்த மகன் அரசாங்கமே ''ம, மா'' வுக்கு மேல் நகருகின்ற தாக இல்லையே என்ருன். அது என்ன என்று கேட்ட தகப்பனருக்கு ''மத்திய அர சாங்கத்தில் மாகாண சபை'' எனப் பதில் கிடைத்தது.

★

இலங்கையின் இனப் பிரச்னையில் தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கு எந்தப் பெரும்பான்மைக் கட்சியுமே தயாராக இல்லை. நம்பியிருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் சீதனத்தகராறினல் வேறு பெண்ணுக்கு மாலையிட்டது போலப் புது அத்தியாயத்தைத் திறந்து தமிழர்களைக் கைவிட்டுள்ளது.

இலங்கை இனப் பிரச்னையில் தமிழகம்போய் வந்த நடிகர் விஜயகுமாரணதுங்காவும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கத் தயாராக இல்லை.

பிரபாகரனும், ஈரோஸ் இயக்கமும் சேர்ந்தால் நாட்டையே கபளீகரம் செய்துவிடுவார்கள் என்கின்ருர். இந்த லட்சணத்தில் ''தமது அடுத்த கூட்டம் யாழ்ப்பாணத்தில் தான்'' என வேறு சொல்லியும் வைத்துள்ளார்.

''ஒரு மொழி; இரு நாடு; இரு மொழி; ஒரு நாடு'' என்ற சமசமாஜிகளும் தமிழரின் சுயநிர்ணயத்தை ஏற்கத் தயாராக இல்லை. மெத்தப் படித்த பெர்னட் சொய்சாவும் இந்த விஷயத்தில் கைகள் இரண்டையும் பின்னே கட்டி வைத்திருக்கின்ருர்.

பல வருடம் நாட்டை யாண்ட ஸ்ரீமாவோ அந்த நாளில் பயங்கரவாதத்தை அடக்கியது பற்றி மனப்பால் குடிக்கின்ருர். இந்த நாள்—தமிழர் பிரச்னை தீர்க்கப்பட வேண்டும் என்ருல் புதிய தேர்தல் வேண்டுமாம்!

வடக்கையும் கிழக்கையும் இணைப்பது தமிழர்களின் குறைந்த பட்சக் கோரிக்கை. அதுக்கும் ஆட்சி தயாராக இல்லை. வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதற்குத் தயாரா? அதுவுக்கும்இயலாது. இணைக்கவும் கூடாது, பிரிக்கவும் கூடாது இதுதான் அரசியல் தீர்வு.

என்னைச் சந்தித்த ஒரு அரசியல்வாதி ஒரு விதண்டாவாதக் கதை சொன்னர். அதைச் சிங்கள மக்கள் முன்பு வைத்தால் எப்படி இருக்கும்.

''என்ன அது?''

''ஓ அதுவா.''

சிங்கள மக்களுக்குத் தனி நாடு வேண்டும என்ருல்,

# வேதாளம்மீண்டும் மரத்தில் ஏறிய கதையாகுமா?

மறுகருத்தில் சொன்னல் அரசியலுக்கு அரசியல் தீர்வும் ராணுவத்தீர்வுக்கு ராணுவத் தீர்வும் இதற்குள் அடங்கியிருக்கலாம்! மாகாணசபை தான் தீர்வு என்ருல் இடையிலே திருகோணமலை— அது மத்திய அரசாங்கத்துக்கு!

மாநில சுயாட்சி கொடுத்தால் அடுத்த கட்டம்—தனி நாடு எனவே அது ஏற்கமுடியாது, இது சிங்கள அரசியல் வாதிகளின் வாதம். மாகாண சபை வந்தால் அடுத்த போராட்டத்தை மிதவாதிகள் மாநில சுயாட்சியை நோக்கியே நடாத்துவார்கள். இதை ஏன் இந்த அரசியல்வாதிகள் பேசக்கூடாது?

தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு தனிநாடு கிடைத்தாலே அது சாத்தியமாகும்.

★

அலாஸ்கா மாகாணத்தைச் சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு விற்றுவிட்டது பாதுகாக்க முடியாத போது கைவிடுவதே சிறந்தது.

ரஷ்யாவின் உக்ரோன் மாகாணத்தை ஹிட்லர் பிடித்து ஜெர்மனியுடன் இணைத்து ஜெர்மனியில் தேனும், பாலும் பாயக் கனவு கண்டார். கடைசியில் எதுவும் நடக்கவில்லை. தமிழ் மக்களின் பாரம்பரியங்களை மறுப்போர்க்கு இவை பின்னேக்கிப் பார்க்கத்தக்கவை.

மாகாண சபையை ஏற்றுக் கொண்டால் போராளிகட்கும் இராணுவத்தில் இடம் கிடைக்கும் என அமைச்சர் லலித் அத்துலத் முகலி கூறியுள்ளார்.

அமைச்சரின் கூற்றுப்படி பார்த்தால் ராணுவத்தில் இடம் கிடைக்காமையால் தான் தமிழ்ப் போராளிகள் ஆயுதத்தைத் தூக்கினர்கள் என்று அர்த்தங்கொள்ள வேண்டியுள்ளது.

ஒரு அங்குல நிலமேனும் மாகாண சபையின் அதிகாரத்தில் இல்லை. இராணுவ முகாமும் இந்தச் சபை வந்த பின்பு அகற்றப்படமாட்டாது. இது ஜனதிபதி அவர்களின் கூற்று. அப்படி என்ருல் வேதாளம் மீண்டும் முருக்க மரத்தில் ஏறிய கதையாகத்தான் இந்த மாகாண சபைச் சமாச்சாரங்களும் முடியும்போலும்.

பாணபத்திரன்

## ஆரம்பமும் இறுதியும்

நெப்போலியன் போர் வீரர்களைத் திரட்டும் போது ''உங்கள் வாழ்க்கையல் தேனும் பாலும் பாயச் செய்ய என்னல் முடியும்'' என்ருன்.

லீப்ஸ்டிக் போர்க்களத்தில் அவன் தோல்வி அடையும்போது சொன்னது. ''உங்களை என்னல் காப்பாற்ற முடியாது; போர்க்களத்தை விட்டு ஓட முடியுமென்ருல், தப்பிப் பிழையுங்கள்'' என்ருன்.

—அம்பலம்.

## வாழ்க சிறந்து

பேர்பூத்த யாழிந்துப் பெருமகளிர் கல்லூரி
பார்பூத்துப் பொலிந்து பரந்திலங்கச்—சீர்பூத்த
செல்விராம நாதன் செயனேங்கு மாஅதிபர்
கல்விப் பணிபுரிந்தார் காண்.

செந்தமிழும் சைவமும் சேர்ந்து சிறந்திடவே
அந்தமிலா தேயுழைத்த அன்னே!—எர்தம்
தமிழன்னே தன்சேயின் தனிப்பண்பு கண்டு
குமிழ்நகை பூத்தாள் குளிர்ந்து.

கற்பவை யெல்லாம் கசடின்றிக் கற்றபின்
நிற்குந் தகைசால் நிறைவுடனே—பொற்புநிறை
கல்விப் பயிர்தன்னைக் காத்து வளர்த்திட்ட
செல்வியே! வாழ்க! சிறந்து.

—தா. தேவமதுரம்.

## நாளை தேர்த்திருவிழா

ஈழத்திருநாட்டின் இணையிலா ஆலயம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில். இது அநாதியானது; அற்புதமானது.

சோழ இளவரசி மாருதப் புரவல்லி நிர்மாணித்த ஆலயம் இதுவெனவும், இதற்குரிய விக்கிரகம் வந்தடைந்த துறையே காங்கேசன்துறையெனவும் முந்தையோர் பகர்வர். வானளாவ நெடிதுயர்ந்து நிற்கிற இவ்வாலயத்துக் கோபுரமே இத்தீவின் கண்ணுள்ள சைவ ஆலயங்களில் மிகமிசப் பழமையான கோபுரமாகும். மூன்று வீதிகளையுடைய இவ்வாலயத்து தேரோடும் வீதி, வெற்றிலை அமைப்பில் அமைந்துள்ளது.

### அந்தணபரம்பரை

இங்குள்ள அந்தண பரம்பரை சிதம்பர தீட்சதர் பரம்பரை. குமாரதந்திர முறைப்படி அன்று முதல் இன்றுவரை இவ்வாலய பூசைகள் ஆறுகாலமும் நிகழ்கின்றன.

இவ்வாலயத்து ஏழாவது ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்; அண்மையில் தென்னகத்தில் யாத்திரை மேற்கொண்டு முப்பத்தாறு ஆலயங்களைத் தரிசித்தார். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கும் அதன் ஆதீன பரம்பரைக்கும் அங்கே நிலவிவரும் தனி மதிப்பை பெருமைமைய, குருக்களுக்கு அங்கே காட்டப்பட்ட வரவேற்பு சுட்டிநின்றது. வடபழனி, பழனி, திருச்செந்தூர், இராமேஸ்வரம் உட்பட பல ஆலயங்களில் மாவை ஆதீனத்தை மகோன்னதமாய் வரவேற்றனர். வடபழனியில் நடந்தேறிய தீர்த்தோற்சவத் திருவிழாவில் தீர்த்தக் குளத்தில் சுவாமியை வைத்து மிதக்கவிடும் தெப்பத்தில் மாவை ஆதீனகர்த்தரையும் அமரவைத்து முதற்சுற்றில் கௌரவம் கொடுத்தார்கள். மூர்த்தி தல தீர்த்த விசேடத்துடன் கீர்த்தியும் மந்திர உச்சாடனப் பெருமையும் கொண்ட ஒரு ஆதீன பரம்பரை இவ்வாலயத்துக்கு உண்டு.

12-7-86 நிகழ்ந்த கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பித்த வருடாந்த மகோற்சவம் வக்கினம எதுவுமின்றிச் சிறப்புடன் நிகழ்கிறது. நாட்டுக்கோட்டைச் செட்டிமார் நடாத்தி வந்த நடனத் திருவிழா, மஞ்சத் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, வேட்டைத் திருவிழா, பெரிய சப்பரத் திருவிழா எனத் தொடர்ந்த விசேட திருவிழாக்களிலும் பக்தர்கள் பெருமளவில் பங்குகொண்டு முருகனருள் பெற்றனர்.

நாளை (4-8.86) திங்கட்கிழமை நடைபெறவுள்ள பஞ்சரத பவனி பக்தர்களைப் பணித்திட வைக்கும். பல வருடங்களுக்கு முன் பஞ்சரத பவனியைப் பார்த்துப் பரவசமுற்ற மேற்கத்திய நாட்டினர் சிலர் இந்த நிகழ்வை வியந்து பேசினர். ''சுதந்திர வழிபாட்டைக் கண்டோம்; வடம் இழுத்தல், பிரதட்டை செய்தல், கற்பூரம் எரித்தல், பஜனை பாடுதல், கொடி குடை ஆலவட்டம் பிடித்தல். காவடி ஆடுதல், நாம உச்சாடனம் செய்தல், அர்ச்சனை செய்வித்தல், விழுந்து வணங்குதல் என பல்வேறு தூய கைங்கரியங்களில் பக்தர்கள் விஸ்வாசத்துடன் ஈடுபடுவதைக் கண்டோம்'' என்றெல்லாம் புகழ்ந்து இத்தகைய பண்பாட்டின் நிலைக்களனுய் இவ்வாலயம் மிளிர்கிறதே எனப் போற்றினர்.

தேரின் அமைப்புக்களில்கூட தனிச்சிறப்புண்டு, சித்திர வேலைப்பாடுகள் அமைந்த சீலைகள், கொடிகள், தொங்கல்கள்தான் தேரினை அணி செய்கின்றன. இழுக்கப்படும்வேளை தேரின் மேற்பகுதியும் சீலைகளால் ஆய தொங்கல்களும் நடமிடுவதுபோலக் காட்சிதருகின்றன. அண்ட சராசரமும் நடன நிலையில் அமர்ந்திருப்பதைச் சுட்டுவதுபோல அமைகிறது இந்தப் பஞ்சரதபவனி முதலாம் தேரில் விநாயகரும், இரண்டாம் தேரில் முத்துக்குமரரும், மூன்ரும் தேரில் மீனுட்சிசுந்தரரும், நாலாம் தேரில் ஷண்முகப் பெருமானும் ஐந்தாம் தேரில் சண்டேஸ்வரரும் ஆரோகணித்து வீதிவலம் வரும் காட்சி தனி அழகுமிக்கது.

# பக்தர்களைபரவசத்திலாழ்த்தும் மாவைக் கந்தன்!

ஏ. ரி. பொன்னுத்துரை

## கோழித் தலையில் மருந்து

'ரேபிஸ்' எனப்படும் வெறிநோய் இங்கு வேகமாகப் பரவி வந்தது. இந்த நோய் காட்டில் திரியும் ஓநாய், நரி மூலமே நாட்டில் பரவியது. இதனைத் தடுப்பதானல் காட்டு விலங்குகளுக் வெறிநோய்த் தடுப்பு ஊசி போடவேண்டும். அந்த மிருகங்களைப் பிடித்து ஊசி போடுவது சாத்தியமில்லை எனக் கண்ட டாக்டர்கள் சமீபத்தில் ஓர் எளிய முறையைக் கையாண்டு அந்தப் பிரச்னைக்குத் தீர்வு கண்டுள்ளனர். கோழிகளின் தலைகளில் வெறிநோய்த் தடுப்பு மருந்தை வைத்துக் காடு முழுவதும் பகிர்த்துவிட்டார்கள். அவற்றைக் காட்டு மிருகங்கள் தின்றபோது அந்த மருந்தும் உட்செலுத்தப்பட்டு மிருகங்களுக்கு இருந்த வெறிநோய் பெருமளவில் குணமாகிவிட்டது.

## சாளர நிலா

[யன்னலின் ஊடாகத் தன் பொன்னொளியை வீசி வான்முகட்டில் வலம் வருகின்ற தண்மதியைக் கண்டு ஒரு கவிஞனுள்ளம் இன்பக் களிப்பிற் பொங்கித் திளைக்கின்றது.]

கோடை யிரவின் மின்மினிகாள்!
தொலைவில் நீவி ராழ்ந் தங்கு
ஒளிமின், ஒளிமின், நும்பொன்னொளியை!
அவள் துயில் கின்ருள்!
என் அணங்கு துயில்கின்ருள்!
துயில் கின்ருள்!

கோடை யிரவின் தண்மதியே!
மேலைச் சரிவின் கீழ் வானில்
ஆழ்மின், ஆழ்மின், நின் வெண்ணொளியை!
அவள் துயில் கின்ருள்!
என் அணங்கு துயில் கின்ருள்!
துயில் கின்ருள்!

கோடை யிரவின் காற்றே நீ!
தாவிப் படரும் பூங்கொடி போல்
மடிமின், மடிமின், நின்வெண்சிறகை!
அவள் துயில்கின்ருள்!
என் அணங்கு துயில்கின்ருள்!
துயில் கின்ருள்!

கோடை இரவின் கனவுகளே!
சொல்மின் அவட்கு! தலைவன் அவள்
ஆழ்துயில் வேளை காவல் செய
அவள் துயில் கின்ருள்!
என் அணங்கு துயில் கின்ருள்!
துயில் கின்ருள்!

ஆங்கில மூலம்: மகாகவி லோங்(f) மெல்லோ

தமிழில்: இளம்பரணன்

# உலகம் சிறைச்சாலை மனிதன் திறந்தவெளி கைதி

மனித உடல்கள் விலை பேசப்படுகின்றன! மனிதஉயிர்கள் மனிதனால் பலியாக்கப்படுகின்றன. அவனின் எலும்புகள் சில நாடுகளால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன! இந்நிலையில் எமக்குச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் கிடைத்துவிட்டதாக மனிதன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கின்றான்!

### குடும்பத்தின் கைதி

கனியும் கனிகள் எல்லாம் படைப்பதற்கு உகந்தவை அல்ல பூக்கும்பூக்கள் எல்லாம் ஆண்டவனை அர்ச்சிக்கும் யோக்கியம் உடையவையும் அன்று! ஆண்டவனை அர்ச்சிக்கும் அலரி மலரே தன் வித்தில் மனிதனை அழிக்கும் வித்தையை அடக்கியிருக்கின்றது! பூவுலகில் மலர்ந்துவிட்ட மனிதரெல்லாம் வாழ்க்கை என்ற வைகறைப் பொழுது விடிவதற்குச் சிலுவை சுமக்க வேண்டியோரே! எமக்கு அளிக்கப்பட்ட இறைவன் தீர்ப்புக்களில் எமக்கு அருகேயுள்ள சிறையின் சுவர்கள் நீட்டப்படலாம்; குறுக்கப்படலாம். மனிதன் எங்குமே சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் எங்குமே அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான் என ரூசோ எழுதினான். ஆம், ஐந்து கண்டங்களைச் சிருஷ்டி செய்த இறைவன் அவற்றின் நடுவே அவர்களைச் சிறை வைத்து உள்ளான்!


வல்லரசு என்ற நாட்டில் வசிப்போர் மேலாதிக்க வாசிகளின் சிறையிலே வாடுகிறார்கள்!

தாயின் சிறையிலே பத்து மாதம் வாழும் சிசு தான் மீண்டும் பிறந்து இருப்பது சிறைச்சாலையையே என அழுகின்றது! தாயின் பாலிலே வாழும் குழந்தை தந்தை என்ற சிறையன்பரையே நம்பி வாழ்க்கையைத் தொடங்குகின்றது!

பொருளாதாரம் என்ற வலிமையை அடைந்த அந்தக் குழந்தை திருமணம் என்ற பந்தத்தில் பழைய சிறையை உடைத்துக்கொண்டு செல்கின்றது! ஆனால் திரும்பி வந்திருப்பதும் சிறைச்சாலைக்குத்தான்! திருமணம் செய்தவன் எப்படி வெளியேறுவது என நினைக்கும் நேரம், புதியவன் வந்து தன்னைத் தானே சிறைப்படுத்திக்கொண்டான். இனி முதுமைவரை அவன் சிறையில்தான்! காலை என்ற வைகறைப் பொழுதில் அவன் எழும்பிடவேண்டும்! சேவல்கூவிடும் நேரம் அவன் சிறை என்ற நித்திரைக்கூட்டை அவன் காலிசெய்தல்வேண்டும். பின்பு எட்டு மணி நேரத்துக்குமேல் உழைத்து நித்திராதேவியின் மடியிலே விழவேண்டும். மனிதா உலகம் என்ற சிறைச்சாலையில் உனக்கு விடுதலை எப்போது!

### மதத்தின் கைதி

மதங்கள் பற்றித் தாய் வயிற்றில் இருக்கும்போது என்ன கவலை? பிறந்த உடனேயே என் மதம் எது என உலகம் எனக்கு விலங்குபூட்டிவிடுகின்றது! அதன்பின்பு என் கண்ணில் காணும் யாவரும் மத வைராக்கியத்தால் என்னால் பிரிக்கப்பட்டவர்களாம்! ஓ...... இறைவனே!......



### சுவர்களுக்குள் கைதி

தாத்தாரியாவின் படையெடுப்புக்கு அஞ்சிய சீன மக்கள் அவர்களைப் பிரிக்க நீண்ட மதில் ஒன்றைக் கட்டினர். ஓ......மனிதா உலகம் பிரிக்கப்பட்ட ஒரு சிறையா? ஒன்றாக வாழ்ந்த ஜேர்மன் மக்கள் வல்லரசுகளின் பங்குபோடலில் இரண்டாகப் பிளந்தனர். இதனை மானம் கெட்ட சுவர் (Wall of Shame) என அழைப்பதில் என்ன பிழை? அம்மா கிழக்கு ஜேர்மனியில், மகனோ மேற்கு ஜேர்மனியில்! பாசத்தைக் காணக் கம்பி வேலியருகே கண்ணீர் மழைபொழிவதைத் தவிர வேறு ஏது வழி?

இந்திய உபகண்டம் பிறந்தது 1947-இல்! மேற்கிலும், கிழக்கிலும் பாகிஸ்தான் உருவானது, அதுவே இன்னும் இரண்டாகப் பிளந்தது. இப்போது இந்தியாவுக்குக் கிழக்கே பெரிய முள்வேலி அமைக்கப்பட்டு உள்ளது. சுதந்திரமாக வாழ்ந்த பாலஸ்தீனமக்கள் எத்தனை நாடுகளில் அனாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். நாம் பிறப்பது எல்லாம் சிறைப்படவோ?

மனிதனை மனிதன் கைதியாககய நாளில் இருந்து மனித நாகரிகம் சிறைக்குள் தள்ளப்பட்டுவிட்டது!

நாகரிக நிலையினை உலகிற்கு அளித்ததாகச் சொல்லும் பிரான்சியரும், பிரித்தானியரும் அடிமை வியாபாரத்தில் சுகம் கண்டவர்களே! சிறையின் காவலாளிகளான இவர்கள் மனிதனுக்கு நாகரிகத்தைச் சொல்லிக்கொடுத்தவர்கள் எனச்சொல்வது வேடிக்கையானது.

தாய் அரசு தழைத்த காலம் போய் அன்னமிட்ட கரங்களுக்கு விலங்கிட்டுப் பெண்ணடிமை கொண்ட பேடித்தனம் இன்றுவரை நீடிக்கிறது.

பெண்களை ஆண்கள் அடிக்க உரிமை உண்டு என நெப்போலியன் சட்டங்கள் வலியுறுத்தின! பெண்ணடிமைத்தனத்தை மனிதன் வரவேற்ற போதே நாகரிகத்துக்கு ஆப்பு வைக்கப்பட்டுவிட்டது!

நியூட்ரன் குண்டு வந்த இந்த நாள்தான் நாகரிகத்தின் உச்சக்கட்டம் என்றால் குகைகளுக்குள் மனிதன் வாழ்ந்த காலம் பொற்காலமே!

மனிதன் தன் வயிற்றை நிரப்ப நிர்வாணச் சிறையில் அகப்படுகிறான் இன்று! நாகரிகத்துக்கு இது போன்ற சோதனை ஒருபோதும் ஏற்பட்டது இல்லை! இயந்திர மனிதர்களுடன் போட்டியிட்டு வயிறு நிரப்பும் கைதியாக மனிதன் வாழ்கிறான். இந்த இக்கட்டான காலத்தைவிடக் காட்டிலே வேட்டையாடிக்காட்டுப் பொந்திலே தேன் எடுத்து ஆற்றங்கரையிலே தண்ணீர் குடித்து மாந்தித்திளைத்த அந்தக் காலம் இந்தக்காலத்தை விட எந்தளவில் கீழானது?

### வயோதிபக் கைதி

வயோதிபர் ஒருவர் அனாதை விடுதியிலே சிறை வாழ்க்கை வாழ்கின்றார்! தான் பெற்ற பிள்ளைகளே தாமுண்டு தம் பாடுண்டு என்ற ரீதியில் போய்விட அனாதை விடுதியில் இருக்கும் அந்த முதியவருக்குக் கிடைத்தது விடுதலையா? ஜன்மாந்தர தண்டனையா?

ஒருநாள் செய்த தவறுக்காக ஆயுள் தண்டனை பெறுபவன் மனிதனே அன்றி வேறு யார்?

ஆம்... மனிதா உலகம் என்ற கூண்டினுள் உனக்கு விடுதலை எப்போது?

**திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்**

---

## ● ராணி தலைமையில் ஒரு ராஜாங்கம்!

(முன் தொடர்ச்சி)

# தேனெடுக்க தேடிப் போனாலும் ஆடிபோல் அமையாது

நீங்கள் தேன்கூடு ஒன்றினைச் செய்வதற்கு முன்பு சில அடிப்படை விஷயங்களை அறிந்து கொள்வது நல்லது!

இராணுவ முகாம் அருகே இருந்தால் மனிதர்கள் இருந்த இடத்தைவிட்டு ஓடுவார்கள். அதுபோன்று தேனீக்களுக்கும் பல பல எதிரிகள் வாழ்க்கையில் உண்டு அவைகளை தமக்கு எதிரில் காணின் தேனீக்கள் ஊரைவிட்டே ஓடிவிடும்.

### யார் அந்த எதிரிகள்?

### மெழுகுப் புழு (Wax Worm)

தேனீக்களின் கூட்டுக்குள் இவை இலகுவாகப் புகுந்துவிடக்கூடியவை இந்த மெழுகுப் புழுக்களை அழிக்கும் வல்லமை தேனீக்களுக்கு இல்லை. தேன் கூட்டுக்குள் நுழைந்த இந்தப் புழு அங்கே தனக்கென்று ஒரு வலையைப் பின்னும். கொஞ்ச இடம் கொடுத்தால் மிஞ்ச இடம் பிடிக்கும். இந்தப் புழுவின் ஆதிக்கத்தால் தேனீக்கள் திகைத்துப் போகும். அப்போது ராணித் தேனீ முட்டையிடுவதை நிற்பாட்டும். அத்துடன் இதுவரை காலமும் தாம் சேகரித்த தேனையும், மகரந்தப்பொடிகளையும் சாப்பிட்டு விட்டுக் கூட்டைக் காலி செய்யும்!

### கருங்குளவி

தேனும், மாமிசமும் சாப்பிடக்கூடியவல்லமைகொண்ட குளவி இது.

தேன்கூட்டை இது கண்டுபிடித்தால் ''போராளிகளின் முகாமை'' இராணுவம் சூழ்ந்தது போலத்தான் இந்தக் குளவி தேனுடன்வரும் தொழிலாளியைத் தேன்கூட்டுக்கு அருகிலேயே வழிமறிக்கும் அதன் பின்பு அது கொண்டுவரும் தேனைப் பலாத்காரமாகப் பறித்துக்குடிக்கும் அது மாத்திரமல்ல—தொழிலாளித் தேனீயையும் அந்த இடத்திலேயே அடித்துக்கொல்லும்!!

### கருஇன வண்டு

தனது உடம்பில் வெள்ளைக் கீறுகளுடன் அரைஅங்குல நீளத்துடன் இதுகாணப்படும். இது குழப்பம் செய்யக்கூடியது அல்ல. மெல்ல மெல்ல வந்து தேனைக் குடித்துவிட்டுப்போய் விடும். இதன் உடலின் மேற்பாகம் 'பிளாஸ்ரிக் போன்ற அமைப்புடன் காணப்படுவதால் தேனீ இதனைத் தாக்குவது அசாத்தியம். மாறாக, அது தனது இருப்பிடத்தை மாற்றும்.

பொதுவாகக் குப்பை கூளங்கள், தவிடு, நெல் இருக்கக்கூடிய இடங்களில் தேன் கூட்டை வைப்பது நல்லதல்ல. இதனால் அதில் விளையக்கூடிய கிருமிகள் தேன்கூட்டினுள் புகக்கூடிய ஆபத்து உண்டு.

நண்டுபோல அமைப்பில் சில உண்ணிகள் உண்டு. இவையும், தேன்கூட்டைச் சேதப்படுத்தக் கூடியன.

### தேனுக்கொரு ஆடி!

ஆடி மாதம் நீங்கள் தேன் வளர்க்க நல்ல காலம். பொதுவாக ஆடி மாதத்தில்தான் தேன் கூட்டில் அதிக தேன் உண்டு. இதனால் தேனீக்கள் கூட்டை விட்டுப் பிரிவதற்கு முற்படும். இக்காலத்தில் தான் தேனீக்களை வளர்ப்போர் அதில்உள்ள 'கொலனி' களைப் பிரித்து விற்கப்பார்ப்பார்கள்.

ஒரு கொலனியின் விலை 60-ல் இருந்து 100 வரை போகும்!

### தேன் கூட்டின் அமைப்பு

நீங்கள் இதனைச் செய்யும் வல்லமை இருந்தால் செய்யுங்கள் இன்றேல் தச்சர் ஒருவரின் உதவியை நாடுங்கள். இந்தக் கூட்டில் பல அறைகள் இருப்பதைப் பாருங்கள். இந்த ஒவ்வொரு அறையிலும் 'கொலனி' நீங்கள் வைக்கலாம். கொலனியை வாங்கும்போது ஒவ்வொரு ராணியும் இருக்கக்கூடியதாக வாங்குங்கள். இல்லையென்றால் ராணியை உருவாக்கத் தேனீக்களுக்குச் சிலகாலம் எடுக்கும். அதற்குள் தேனீக்களுக்கு நரம்புத்தளர்ச்சி உண்டாகும்!

சில சமயங்களில் ராணித் தேனீக்களுடன் 'கொலனி'யை நீங்கள் உண்டாக்கும் போது இருப்பிடம் பிடிக்காது ராணி வெளியேறியும்விடலாம்! எனவே ராணியைச் சில காலம் நீங்களே கண்காணியுங்கள்!

### மாரிகாலக் கவனிப்பு

மாரிகாலம் பூக்கள் உதிரும் காலம். அப்போது தேன் பெறுவது மிகவும் கஷ்டம். இதனால் தேனீக்கள் பசியுடன் காலம் தள்ளும். சேர்த்த தேனை உறிஞ்சிக் குடிக்கும்! எனவே இக்காலத்தில் சர்க்கரை அல்லது கற்கண்டைக் கரைத்துக் கூட்டில் வைக்க வேண்டும். அப்படி வைக்கும் போது அதன் பசிப்பிணி போவது மாத்திரம் அல்ல, உங்களை இனம் கண்டு எஜமானர்களாக ஏற்றுக்கொள்ளும்!

சூரியன் உதிக்கும் கிழக்கு முகமாகத் தேன்கூட்டை வையுங்கள். அப்போதுதான் தேனீக்கள் அதிகாலையில் துயில்எழ நீங்கள் உதவி புரிபவர்களாக இருப்பீர்கள்.

(இன்னும் வரும்)

**இணுவையூர் முருகேசம்பிள்ளை**

---

## "கட்டிப்போட்ட வாத்து"

கட்டிப்போட்ட வாத்து (The Enchained Duck) என்ற பிரெஞ்சு நையாண்டிப் பத்திரிகை அண்மையில் தனது எழுபதாவது வயதைப்பூர்த்திசெய்தது. விளம்பரங்கள் இல்லாமல் யாரிடமும் நிதியுதவி பெறாமல், அரசியல் சார்பில்லாமல், பத்திரிகை சுதந்திரத்தைப் பேணிவருகிறது இப்பத்திரிகை. 70 வயது நிறைவை அப்பத்திரிகை இப்படியாக எழுதியது: ''70 வயதாகியும் பல் போகவில்லையாம்.''

—ஸச்சி

---

## தலை விதியா? தலை மதியா?

நல்லது நடந்து விட்டால்
நல்லது விதியே என்பர்
கெட்டது நடந்து விட்டால்
கெட்டது விதியே என்பர்
என்னதான் நடந்தால் என்ன
உன்விதி அதுதான் என்பர்
சொன்னது வேத அந்தம்
இன்னது நடக்கும் என்பர்
முடிந்ததும் விதியைச்
சொன்னார்
முடிபுகள் எது வானாலும்
விடிந்ததும் விடிவை எண்ணி
வேகமாய் ஓடும் வாழ்க்கை
மதிக்கென்ன வேலை என்றால்
மதியினால் விதியை வெல்ல
மனிதனால் முடியா தென்பர்
மதியினி விதிக் குள்ளேயே
மாய்ந்துமே போகு மென்பர்
மதியையே விருத்தி செய்து
மதியினில் வல்லோ னென்று
மதிக்கின்ற மனிதன் இன்று
மதியது விதியின் வண்ணம்
மனிதனை நடத்திச் செல்லும்
விதியது என்று சொன்னார்
வேதமாய் அமைத்துவிட்டார்

—வ. யோகானந்தசிவம்.

# தொடர் நவீனம்

# இருள் இரவில் அல்ல

★ இணுவையூர்
சிதம்பரதிருச்செந்திநாதன்

வெகுநேரமாக அவர்கள் பேசிக்கொண்டு இருந்துவிட்டுப் படுக்கைக்குப் போய்விட்டார்கள்.

நேரம் நள்ளிரவைத் தாண்டிவிட்டது. பின் விறுந்தையில் தன் மகனின் அருகில் படுத்திருந்த வசந்தமலர் இடையிலே விழித்துக்கொண்டாள்.

அந்த விறுந்தையில் சாரதாவும் தங்கலட்சுமியும் அமர்ந்திருந்தார்கள். இந்த நேரத்தில் எதற்காக நித்திரை கொள்ளாமல்இருக்கின்றார்கள் என்பது வசந்தமலருக்குச் சந்தேகத்தைக் கொடுக்கு முன்னரே அவர்களது உரையாடல் ஆரம்பித்தது.

''கணநாதனைவிட டியூஷன் மாஸ்டர் நல்லவன் தான்'' என்று தங்கலட்சுமி சொன்னாள்.

''நூற்றுக்கு நூறுவீதம் கணநாதனை விடச் செந்தூரன் நல்லவர். குடிக்கிற பழக்கமோ, சிகரெட் பழக்கமோ இல்லை. எவ்வளவு நல்லவர்'' சாரதாவும் கூறினாள்.

''நல்ல இட்டத்துப் பொடியனும் தான்''

''ஓம் அம்மா அவரை வராமல் பண்ணினால் என்னம்மா செய்யிறது''

''அதுக்கு என்னடி பிள்ளை செய்யிறது. அவன் வந்து போனால் கணநாதன் எந்த நாளும் குடிச்சுப்போட்டு வந்து கூத்தடிப்பன். அதனால் தான் கொஞ்ச நாளைக்கு டியூஷன் மாஸ்டர் இந்தப் பக்கம் வராமல் நிற்கட்டும்''

''எத்தனை... நாளைக்குத் தான் அவர் வராமல் நிற்கிறது அம்மா''

''கொஞ்ச நாளைக்குத் தானே பிள்ளை பிறகு பார்த்து ஏதாவது செய்வம். அது சரி அந்த டியூஷன் மாஸ்டர் உண்மையாக உன்னை விரும்பிறார் தானே''

''ஐயோ அம்மா ஒருநாளைக்குத் தன்னும் அவர் என்னைக் காணாமல் இருக்கமாட்டார் அம்மா''

தாயும் மகளும் பேசிய பேச்சுக்கள் நாராசமாக வசந்தமலரின் காதில் விழுந்தன. அதனால் அவர்களது நோக்கமும் அவளுக்குப் புரிந்தது.

★

தங்கலட்சுமி மாமி வீட்டு நடவடிக்கைகள் எல்லாம் வசந்தமலருக்கு புதுமையாகத் தான் தெரிந்தன. அவர்களது வீட்டில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இயல்பானதாக இல்லாமல் தனித்தன்மையுடன் விளங்கின.

அந்த வகையில் சேர்ந்தது தான்சாரதாவின் நடவடிக்கையும். முதல் நாளிரவு சாரதாவும் தங்கலட்சுமியும் சேர்ந்திருந்து கதைத்த கதையினைக் கேட்ட பின்னர்தான் அவர்களது அடிப்படை நோக்கம் விளங்கியது.

தாலிகட்டிய கணவனை புறக்கணித்துவிட்டு மாற்றானை — மயக்குவதில் தாயும் மகளும் ஒத்துநிற்பதில் புதுமை இல்லாமல் இருக்குமா? அதுபற்றி யோசிக்கும்போதே வசந்தமலரின் மனம் குழம்பியது.

இப்படியாக நடக்கின்றவர்கள் தன்னை முறைகேடாக நினைப்பதும் நடத்த முற்படுவதும் அவருக்கு வேதனையைக் கொடுத்தது.

அன்று மத்தியானம் கந்தையர் வந்தார். வழக்கம் போல அவரை வரவேற்று பின்விறுந்தையில் அமரச்செய்தாள் வசந்தமலர்.

சிறிது நேரம் இருவரும் ஒன்றுமே பேசவில்லை. எப்படி பேச்சைத் தொடக்குவது என்று கந்தையர் சஞ்சலபபட்டார். கந்தையர் எதற்காக வந்திருக்கிறார் என்பது வசந்தமலருக்கு தெரியும். அவர் முன்னரே தெரிவித்த விடயங்களுக்கு எப்படி பதில் சொல்வது என்பது பற்றி வசந்தமலர் யோசனை செய்தாள்.

''என்ன பிள்ளை என்ன முடிவு செய்திருக்கிறாய்?'' என்று கந்தையர் தான் முதலில் பேச்சை தொடக்கினார்.

''அப்பு எனக்கு ஒன்றுமே புரியவில்லை. வாழ்வதா? சாவதா? என்றுகூட தெரியவில்லை'' என்று வசந்தமலர் சொன்னாள்.

''சும்மா கண்ட கதைகளையும் விட்டுப்போட்டு நான் கேட்ட கேள்விக்கு பதிலைச் சொல்''

''அப்பு''—என்று விம்மினாள் வசந்தமலர்.

''என்ன மோனை—என பரிவுடன் கேட்டார் கநதையர்.

''அப்பு எப்படி அப்பு— நான் முடிவு சொல்லுறது—''

''என்ன பிள்ளை நீ திரும்ப திரும்ப ஒரே கதையைக் கதைக்கிறாய். நான் கேட்ட கேள்விக்கு இவ்வளவு நாளும் வடிவாய் யோசித்து இருக்கலாம். ஆனபடியால் இப்ப நீ பதிலை சொல்லலாம்'' என்று கந்தையர்கொஞ்சம் கண்டிப்பு கலந்த குரலில் சொன்னார்.

''அப்பு நான் வடிவாய் யோசித்துப்பார்த்தன். திரும்ப கலியாணம் செய்யிறதைவிட சாகிறது தான் நல்லது போல கிடக்கு''என விம்மலுடன் வசந்தமலர் சொன்னாள்.

''பிள்ளை வசந்தமலர் நீ அன்றைக்கும் உதைத்தான் சொன்னனி. இன்றைக்கும் உதைத்தான் சொல்லுறாய். உனக்கு ஒரு பெடியன் இருக்கிறான் அவனை நல்லபடி வளர்க்கவேணும் தெரியுமே''

''ஓம் அப்பு...''

''அதுக்கு என்ன செய்யப் போறாய்? நீ சாகும் வரைக்கும் இந்த வீட்டில வாழ்ந்திடுவியே''

''இல்லை இந்த வீட்டில இருக்கிறதே ஒரு பெரிய சோதனையாக இருக்கிறது...''

''இப்ப இஞ்சை இருக்கிறதே பெரிய கஷ்டமாக இருக்கேச்க இனிமேல் காலத்தில எப்படி சீவிப்பாய், அல்லது தனியத்தான் ஏதாவது தொழிலை செய்து தன்னும் சீவிக்கலாமே. அதுக்குதன்னும் ஆட்கள்விடுவினமே...'' என்று கந்தையர் பேசிக்கொண்டு போனார். அவர் அதிகமாக பேசுவதால் களைப்படைந்திருந்தார்

வசந்தமலர் கண்களில் நிரம்பிவிட்ட கண்ணீருடன் அவரைப் பார்த்தாள்.

''நான் உள்ளதைத்தான் சொல்லுகிறேன், நீதான் ஒன்றையும் விளங்கிக்கொள்ளுகின்றாய் இல்லை. இன்னும் எத்தினை நாளைக்குத்தான் நான் இருக்கப்போறனோ தெரியாது. நீ அதற்கிடையில் ஒரு நல்ல முடிவு எடுக்கவேண்டும். நீ நல்லமுடிவு எடுக்கும்வரை நான் உன்னைவிடப் போவதும் இல்லை. உன்னைப்பெற்ற தகப்பனாக இருந்து சொல்லுகின்றேன். நீ ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும். உன்னைப் போன்ற பெண்கள் இந்த கேடுகெட்ட சமுதாயத்துக்கு எதிராக வாழ்ந்துகாட்டத்தான் வேண்டும் அதுக்கு உனக்கு நல்ல துணைவேண்டும்'' என்று கந்தையர் சொன்னார்.

வசந்தமலர் பதில் ஏதும் கூறாமல் நின்றாள். அவள் மனத்தில் பலவிதமான போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. ''பிள்ளை நான் போறன் வசதியைப் போல நாளைக்கோ, நாளையின்றைக்கோ வாறன். நீ இன்னும் வடிவாய் யோசித்து ஒரு முடிவுக்கு வந்துவிடு பிள்ளை இன்னுமொன்றையும் உனக்கு சொல்லிப்போட்டு போகவிரும்பிறன். நான் என்றைக்கோ சாகவேண்டியவன் தற்கொலை செய்யிறதுக்கு கிணறுவரை போனனான். ஆனால் தற்கொலை செய்யவில்லை. ஏன் தெரியுமே? உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையைக் கொடுக்கவேணும் என்றதுக்காக. இப்பகூட நீ கலியாணத்துக்கு சம்மதித்தால் நாளைக்கே என்ரை உடல் சாம்பலாகிவிடும். உனக்கு நல்ல வாழ்வு கிடைக்க வழி செய்யாமல் நினையாப்பிரகாரமாக நான் செத்துப்போனால் என்ரை ஆத்மா சாந்தியடையாது. அதுவரையும் என்ரை உயிரை வைத்திருக்க சொல்லித்தான் முருகனை கும்பிடுகின்றேன்'' என்று கந்தையர் சொன்னார். அவர் அப்படி சொல்லும்போது கண்கள் கலங்கி வெகுவாக மனமுருகி போய்விட்டார்.

வசந்தமலருக்கு வயதுபோன தோற்றத்தில் காணப்படுகின்ற ஒரு தெய்வமாகத்தான் கந்தையர் தோன்றினார். அவரது ஆழ்ந்த அன்பு வசந்தமலருக்கு மெய்சிலிர்க்க வைத்தது.

★

அன்று அதிகாலை,

வழக்கம்போல வசந்தமலர் முற்றத்தை கூட்டிவிட்டு வளவின் பின்பக்கத்தைக் கூட்டினாள்.

குசினிக் கப்பால் கார் கராஜ் ஒன்று இருந்சது. முன்பு தங்கலட்சுமிமாமியின் புருஷன் கார் வைத்திருந்த போது அதனை பாவித்தவர்களாம். அவரும் செத்துப் போக காரையும் விற்றுவிட்டார்கள்.

இப்போது பழைய சாமான்கள் தான் அந்தக் கார் கராஜ்சினுள் இருந்தன.

பழைய சாக்கொன்றினை எடுப்பதற்காக வசந்தமலர் அந்த கார்கராஜ்க்கு போனாள்.

வெகு நாட்களாக அந்த இடத்துக்குபோகாதபடியினால் அன்று அங்கு போனபோது அவளுக்கு ஆச்சரியமான காட்சி காத்திருந்தது.

பழைய சாமான்கள் நிறைந்து எப்போதும் குப்பையாக இருக்கும் அந்த கராஜ் இப்போது வெகு சுத்தமாகக் காணப்பட்டது. பழைய சாமான்கள் எல்லாம் ஒரு புறத்தில் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

ஒருபுறத்தில் பழைய கட்டிலொன்று யாரோபடுத்திருந்து எழுந்து போனதற்கான அடையாளங்களுடன் காணப்பட்டது.

யார் இதனை பாவித்திருப்பார்கள் என்று வசந்தமலர் யோசிக்கும்போது சாரதா உள்ளே வருவது தெரிந்தது. ''மச்சாள் இஞ்சை என்ன நடக்குது ..'' என அவள் கேட்டாள்.

''ஒன்றுமில்லை பழைய சாக்கு ஒன்று எடுக்க வந்தனான்'' என்றாள் வசந்தமலர்.

''எடுத்தால் எடுத்துக் கொண்டு போகவேண்டியது தானே... பிறகு ஏன் நின்று யோசிப்பான்'' என அவள் கேட்டாள்.

வசந்தமலர் பிறகு எதுவும் பேசாமல் வெளியே வந்தாள். சாரதாவும் கதவினை பூட்டிக் கொண்டு கராஜ்ஜை விட்டு வெளியேறினாள்.

கராஜ் யாரால் பாவிக்கப் படுகிறது என்பதற்கும் சாரதா தன்னை அவசரமாக அந்த இடத்தைவிட்டு கலைப்பதற்கும் ஏதோ காரணம் இருக்கவேண்டும் என வசந்தமலர் நினைத்தாள்.

ஆனால்.

அதற்கான காரணம் அன்று இரவு அவளுக்கு தெரிந்தது.

அன்று நள்ளிரவு.

விறுந்தையில் படுத்திருந்த வசந்தமலர் திடுக்குற்று விழித்தாள். யாரோ பெரிதாக சத்தமிடுவது காதைப் பிளந்தது.

''எங்கே உவன் மாஸ்டர் செந்தூரன். அவனின்ரை கால் அடிச்சு முறிக்கிறன்...'' என்று சாரதாவின் கணவன் கணநாதன் சத்தம் போடுவதும் தங்கலட்சுமிமாமி ''தம்பி—தம்பி'' என்று பரிதாபமாக அழைப்பதையும் வசந்தமலரால் தெளிவாக கேட்கமுடிந்தது.

அதுகாரணமாக படுக்கைவிட்டு எழுந்து கண்களை கசக்கிக்கொண்டு பார்த்தாள். மங்கிய இருளில் கராஜ்ஜை விட்டு சாரதா ஓடிவந்து கொண்டிருந்தாள். பெட்சீட்டால் உடம்பை அரைகுறையாக போர்த்துக்கொண்டு வீட்டினுள் நுழைந்த அவளைப் பார்த்த வசந்தமலருக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அடுத்த சில விநாடிகளுக்குள் டியூஷன் மாஸ்டர் செந்தூரனும் கராஜ்ஜைவிட்டு வெளியேறி ஓடி மறைவது தெரிந்தது.

வெளியே வீட்டின் முன்பக்கம் தங்கலட்சுமி மாமியினதும் கணநாதனினதும் அமளி பெரிதாக கேட்க தொடங்கியது.

(8 ம் பக்கம் பார்க்க)

## மீனவர் வாழ்வு வளம் பெறுமா?

கானவர் வலையிற் பட்டே
கலங்கிடும் பறவை போன்று
மீனவர் கூட்டம் எங்கும்
மின்னலிற் புழுவே ஆனார்
போனவர் வருவார் என்றே
பொருதிரைக் கடலைப்
பார்த்த
மீனவர் பெண்கள் இன்று
மிகுதுயர் அடைந்தார்
அன்றோ!

அன்றவர் கொண்டு வந்தே
அழகுறக் கொடுத்த மீனை
நன்றவர் முயற்சி என்று
நங்கையர் சந்தை நண்ணி
நின்றவர் விலைகள் கொள்ள
நீள்பணம் பெற்று மீள்வர்
இன்றவர் நிலைமை எண்ணில்
இதயமே பிதுங்கு தம்மா!

தோணிகள் எல்லாம் அந்தத்
தொடுமணற் கரையின
பாங்கர்
பேணுநர் இல்லா தெங்கும்
பிணமெனக் கிடக்கும் காட்சி
ஆணிகள் ஒடிந்த வண்டி
அடங்கியே கிடக்கு மாபோல்
காணிலோர் கவலை யன்றோ
கடற்கரைக் காட்சி இன்று!

வலையொடு பறிகள் எல்லாம்
வற்றியே கிடக்கும் காட்சி
அலையொடு அலையாய் வந்தே
அடிக்குதே நெஞ்சந் தன்னில்
தலையொடு தலையை மோதித்
தந்தொழில் இழந்த மக்கள்
சிலையொடு சிலையாய் நின்றே
சிறுப்பினைப் படுதல் ஏனோ?

—ஆழ்கடலான்.

## ஜேர்மனியில் நம்மவர் பசிதீர்க்க ஓர் உணவுக் கண்காட்சி!




சொந்த மண்ணில் வாழ வழியின்றி வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் புகுந்தும், அங்குகூட சீரான வாழ்க்கை கிடைக்கப்பெறாத எமது துரதிருஷ்டம் பிடித்த இளைஞர்களின் துயர் துடைப்பதில் ஈடுபட்டுள்ளோர் பணி நிச்சயம் பாராட்டப்பட வேண்டியது.

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி சுசீலாதேவி சந்திர சூரியர் ஜேர்மனியில் வசிக்கிறார். அங்கு அகதிகளாகச் சென்றுள்ள தமிழ் இளைஞர்களுக்த உதவிசெய்ய நிதி திரட்டுகின்ற பல்வேறு முயற்சிகளில் ஒன்றாக, இவர் இலங்கை உணவு ரகங்களின் உணவுக் கண்காட்சியொன்றினை வெற்றிகரமாக நடாத்தி முடித்திருக்கிறார். இக்கண்காட்சிக்கு ஜேர்மனியர்களின் அமோக வரவேற்புக் கிட்டியது.

# தமிழகத்தில் வாழ்ந்த ஈழத்து நல்லறிஞர்

## வித்துவான் எவ். எக்ஸ். ஸி. நடராசா

ஈழத்துப் பூதன் தேவனார் சங்க காலத்துப் புலவர். மதுரையிற்போய் வாழ்ந்தவர். இவரின் சரித்திரம் வரலாற்றுக்கு அப்பாற்பட்டது. ஈழத்துச் சான்ருேர் பலர் தமிழகத்திற் குடிபுகுந்து சீருஞ்சிறப்புமாக வாழ்ந்து தமிழன்னைக்குத் தொண்டுகள் புரிந்துள்ளார். இவ்வண்ணம் தமிழ்ப் பணி ஆற்றிய பலரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்தியம்புவதே கட்டுரையின் நோக்கமாகும்.

வரலாறு அறிந்த நல்லறிஞர்களுள் முதற்கண் நிற்பவர் ஞானப்பிரகாசர். இவரை முனிவர், தேசிகர் என்றும் அழைப்பர். பாவலர் சரித்திர தீபகத்தில் ஞானப்பிரகாச தேசிகர் எனப்படுகின்ருர். ஐம்புலிங்கப்பிள்ளை இவரை ஞானப்பிரகாசமுனிவர் என்பர். இவரின் சிவஞான சித்தியார்-சுபக்க உரையைப்பதிப்பித்த யாழ்ப்பாணம் இணுவில் நடராஜ ஐயர் முனிவர் என்பர். இன்னுஞ் சிலர் தம்பிரான் என்றும் வழங்குவர்.

தீபகம் 1886ல் வெளிவந்தது. அதுஞானப்பிரகாசரின் காலத்தை வரையறுக்கவில்லை. ''இருநூற்றுச் சொச்ச வருடங்களுக்கு முன் இவர் இருந்தார் எனல் வேண்டும்'' என்று வாளா சொல்லிப் போயது.

ஐம்புலிங்கப்பிள்ளை எழுதியது ஞானப்பிரகாச முனிவர் வரலாறு. இஃது 1953ல் அச்சேறியது. இற்றைக்கு 370 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தனர் என்கிறது.

முன்னையது இவரின் காலம் கி பி. 1686 என்று கூறப் பின்னையது 1583 என்கிறது. கிட்டத்தட்ட ஒருநூற்ருண்டு வேறுபடக்கூறுகின்றன.

ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியிற் பிறந்தவர். இவரின் சந்ததியில் வந்தவர் நாவலர். கோவதை வேதனை தாங்காது தென்னகம் புகுந்தவர் ஞானப்பிரகாசர். இவையெல்லாம் மெய்மை வாழ்ந்த காலம் பற்றிய தகவல் பொய்மை.

ஞானப்பிரகாசர் வாழ்ந்த காலத்தை எடுத்துரைக்கும் நூல் - யாழ்ப்பாணச் சரித்திரம். ஆக்கியோன் முதலியார் செ. இராசநாயகம். 1933ல் வெளிவந்தது. இவர் சம்பந்தமாக அதில் உள்ளவற்றைத் தந்து ஆதாரங்களை ஆராய்வாம்.

''பறங்கியர் தங்களுக்கு வேண்டிய ஊனுக்காகத் தங்கள் செலவிலே மாடுகள் வளர்த்துக் கொன்று உண்டு வந்தனர். ஒல்லாந்தர் துவக்கத்தில் மாட்டிறைச்சி பெற்றுக்கொள்வதற்கு மிகவும் இடர்ப்பட்டனர். ஊன் கடைகள் திறப்பதற்குச் சனங்கள் மாருயிருந்தபடியால் கிறிஸ்தவராகிய சிலர் நெடுந்தீவில் பசுக் கொலை செய்வோரைக் கொணர்ந்து கோட்டைக்குள்ளே ஊன்கடை திறந்து தங்களுக்குரிய மாடுகளைக் கொன்று தின்றனர். பால் குடிப்பதற்கெனப் பசுக்களை வாங்கிக் காளைக் கன்றுகளைக் கொன்று தின்று வந்தனர். பின் பசுவினங்களையும் கொன்றனர். நாட்பலசென்ற பின் ஊரார் எண்ணத்தையுங் கவனியாது சனங்களிடமிருந்து மாடுகளை வலிந்து பற்றி உண்டு வந்தனர். இன்ன காலத்திற்கு இன்னுர் இவ்வளவு மாடுகள் கொடுக்க வேண்டுமெனக் கட்டளையுஞ் செய்தனர். இந்தியாவிலிருந்து வளர்ப்பதற்கெனச் சனங்கள் கொண்டுவரும் மாடுகளில் அடிமாட்டுக்கெனச் சிலவற்றைப் பறித்தனர். தாம் வளர்த்துப் பிள்ளைகளைப் போல அன்பு பாராட்டியமாடுகளை ''ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே'' யென்பதை உணராத அறிவிலிகளுக்கு அளிக்க மனமில்லாத உத்தமர் சிலர் தண்டனை பெறுதலிலும் ஊரை விட்டுப் பிறதேசம் போவதே தருமமாகுமென நினைந்து இந்தியாவுக்குப் போயினர்.

அவ்வாறு சென்ருருள் நல்லூருக்கடுத்த திருநெல்வேலி ஞானப்பிரகாசர் என்பவரும் ஒருவர். இவர் இந்தியாவிலே தமிழ், சமஸ்கிருதம் என்னுமிரு பாஷைகளையும் அதிலுள்ள அறிவு நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுப் பேரறிவாளியாய்த் திருவண்ணுமலைச் சித்தாந்த மடத்திலே ஆதீனத் தம்பிரான் பதவியில் வீற்றிருந்து சமஸ்கிருத பாஷையிற் பல கிரந்தங்களை இயற்றித் தமிழில் அருணந்திசிவாசாரியார் பற்றிய சிவஞானசித்தியார் சுபக்கத்திற்குச் சிறந்த அகலவுரை ஒன்றுமெழுதி வெளியிட்டார்.

இன்னும் வாணிபப் பகுதியிலேயிருந்த சைவவேளாளர் ஒருவர் இதனிமித்தம் இந்தியா சென்று பெரும்புகழ் படைத்துத் தில்லைநாததம்பிரான் எனப்பெயர் பூண்டு தம்பிரான் பதவியிற் சிறந்து விளங்கினுர்.''

ஆதாரங்களின்றி இராசநாயக முதலியார் இவ்வாறு எழுதியிருக்கமாட்டார் எனினும் ஆதாரங்கள் காட்டினுரல்லர். மற்றைய நூல்களை அவர் காலத்து வாழ்ந்த புலவர்களை நோக்கும்போது ஞானப்பிரகாச முனிவர் ஒல்லாந்தர் காலத்திலிருந்தார் என்பது புலனுகும்.

ஞானப்பிரகாசமுனிவர் போர்த்துக்கீசர் காலத்தில் வாழ்ந்தவர் என்பது பொதுவான அபிப்பிராயம். இது தவறுடைத்து. போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தை 1620 தொடக்கம் 1658 வரை ஆண்டு பரிபாலனஞ் செய்தனர். அந்தக் குறுகிய காலத்தில் பசுக்களைக்கேட்டு மக்களைத் துன்புறுத்திஞரல்லர். மாடுகள் இறக்குமதி செய்தாருமல்லர். இலங்கை-இந்தியப் போக்குவரத்து வாய்ப்புகள் குறைவு.

ஒல்லாந்தர் இந்தியத் தென்னகத்திலும் ஆட்சி புரிந்தனர். போக்குவரத்தும் அதிகரித்திருந்தது. ஆகவே ஒல்லாந்தர் காலத்தில் ஞானப்பிரகாசர் இந்தியா செல்லமுடிந்தது எனலாம்.

அன்றியும் ஞானப்பிரகாசர் எழுதிய சித்தியார்சுபக்க உரையைக் கண்டித்து அதனைச் சிவசமவாத உரையென்று மறுத்துச் சிவஞானமுனிவர் எழுதினுர் என்று கூறப்பட்டிருக்கின்றது. சிவஞான முனிவர் 1785-ல் சிவபரிபூரணமெய்தினுர் என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகவே அவரின் காலத்திலே தான் ஞானப்பிரகாசரும் இருந்தார் என்பது பெறப்படலாயிற்று. இருவரும் ஒல்லாந்தர் காலத்திலே வாழ்ந்தவரென்ற உண்மை புலப்படுகின்றது.

சிவஞானமுனிவர் எழுதிய ''சிவசமவாத மறுப்புரை' என்ற கண்டனத்திற்கு எதிராக ஞானப்பிரகாசமுனிவரின் நேரடி மாணுக்கர் ஒருவர் ''வச்சிரதண்டம்' எனப்படும் கண்டன நூலினை எழுதினுர் என்பர். ஆகவே இவர்கள் மூவரும் ஒரே காலத்தவரெனலாம். ஒல்லாந்தர் காலத்துக்கே உரியவர்கள் என்பது தெளிவு.

இம்மடங்களில் ஒன்றுதான் ஞானப்பிரகாச முனிவரால் கட்டப்பட்ட பழமடம் இதன் பக்கலிலிருப்பது இவரால் கட்டப்பட்ட குளம். இதனை ஞானப்பிரகாசர் திருக்குளம் என்று இன்றும் அழைப்பர். இதன் சார்பில் ஞானப்பிரகாச முனிவரின் திருச்சொரூபம் அமைந்த கோவில் ஒன்றுமுளது. தேசிகர் ஒருவர் இன்றுவரை பூசை செய்துவருகிருர். இப்பூசை, ஆராதனைகளை நேரிற்கண்டு களித்துத் தம்பணிகளில் ஈடுபட உழைத்து வந்தவர்களில் ஒருவர் நாவலர் வாரிசுவாகிய சதாசிவம்பிள்ளை. மற்றையவர் ம. க. வேற்பிள்ளைப் புலவர். சதாசிவப்பிள்ளை நைட்டிகப் பிரமச்சாரி. இரசம், அப்பளம் இவறறுடன் சாதம் சாப்பிடுபவர், வேற்பிள்ளைப் புலவர் மாட்டுவண்டியிற் சவாரி செய்பவர். ''திருச்சிற்றம்பலம்'' என்று சொன்னதும் மாடு ஓடத்தொடங்குமாம் ''நமப்பார்வதிபதே'' என்று சொன்னதும் நிற்குமாம்.

எல்லாவகையாலும் நோக்குமிடத்து ஞானப்பிரகாசமுனிவர் ஒல்லாந்தர் காலத்தில் 1658—1795 இருந்தவரென்பதே பொருத்தமுடைத்து எனலாம்.

---

## 'நாட்டிடுவோம் வாழைகளை'

நம்மவர் இறந்துவிட்டால்
நடுச்சாமம் விழித்திருந்து
கம்பங்கள் தோறும் வாழை
கட்டுவது நம் வழக்கம்
பொம்பர், ஷெல் தாக்கித்தினம்
பொதுமக்கள் மடிவதனல்
நம் வீதி தெருக்களெல்லாம்
நாட்டிடுவோம் வாழைகளை.

—யோகி.

---

# தொடர் நவீனம்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வசந்தமலரின் உடல் நடுங்கியது. ''எங்கேயடா மாஸ்டர் செந்தூரன்'' எனச் சத்தமிட்டவாறு கணநாதன் வீட்டின் பக்கம் வந்துகொண்டிருந்தான்.

வசந்தமலர் பயத்துடன் எழுந்து நின்ருள். ''தம்பி இஞ்சை ஒருத்தரும் வரவில்லை. உமக்கு என்ன தம்பி என்ன நடந்தது. இரவு நேரத்தில் வந்து சத்தம் போட்டு மானத்தை வாங்குகிறீரே'' என மாமி கேட்டபடி பின்னுல் வந்தாள்.

''உங்களுக்கு மானமும் இருக்கே? எங்கே மாஸ்டர்''
''தம்பி இஞ்சை ஒருத்தரும் வரவில்லை''

''அப்ப யாரோ இந்தப் பக்கம் ஓடினுர்களே யார் அது''

''அது தம்பி அது'' பேச்சை முடிக்காமல் தடுமாறிய தங்கலட்சுமி மாமி பிறகு சமாளித்துக்கொண்டு

''அந்தக் கேடுகெட்ட கதையை ஏன் கேட்கிருய்? தம்பி இஞ்சை ஒருத்தி இருக்கிருள் தெரியுமே. தாலியறுந்து புருஷனை விழுங்கிப்போட்டு. அவளிட்டைத்தான் யாரோ இரவில் வந்து போறவனும். அவன் இப்ப இந்த அமளியில் ஓடிப்போருன். வேறு ஒன்றுமில்லை. என்ரை பிள்ளையள் வீட்டுக்கை நித்திரை'' எனத் தங்கலட்சுமி மாமி சொல்லி முடித்தாள்.

வெறியுடன் காணப்பட்ட கணநாதன் இருளில் விருந்தையில் நின்றுகொண்டிருந்த வசந்தமலரைப் பார்த்தான். ''சீ எல்லாப் பொம்பிளையளும் கேடுகெட்டதுகள் தான்'' எனப் பேசியவாறு அவளைப் பார்த்துக் காறித் துப்பினுன்.

தங்கலட்சுமி மாமி தன்னுடைய மகள் சாரதாவைக் காப்பாற்றுவதற்காக சொன்ன அபாண்டமான பொய்யைக் கேட்ட வசந்தமலரின் உடல் முன்னைவிட அதிகமாகப் பதறத் தொடங்கியது.

''சீ மாமி கொஞ்சம் தன்னும் மனிசத் தன்மையில்லாமல் என்மீது இப்படிக் குற்றம் சாட்டுகின்றீர்களே'' என நினைக்கும்போது கண்களில் கண்ணீர் பெருகத்தொடங்கியது.

உதடுகளைக் கடித்துக் கொண்டு வசந்தமலர் அழ ஆரம்பித்தாள்.

வெறியுடன் தடுமாறியபடி நின்ற கணநாதன் ஏதோ பிதற்றியவாறு திரும்பிப் போய்க்கொண்டிருந்தான். ''தம்பி நீர் கவலைப்படவேண்டாம். அவள் சாரதா உம்முடைய நினைப்பிலேயேதான் இருக்கிருள்'' என அவன் பின்னுல் தங்கலட்சுமி மாமி சொல்லிக்கொண்டு போனுள்.

நீண்ட நேரமாக ஓசையில்லாமல் அழுதுகொண்டிருந்த வசந்தமலருக்குத் தங்கலட்கமி மாமியும், சாரதாவும் வீட்டிற்குள் இருந்து கதைத்துக் கொண்டிருந்தது கேட்டது.

''இனிமேல் உவன் கணநாதனைச் சமாளிக்கமுடியாது. நாளைக்கு நீ மாஸ்டரோடு போய்விடு. கொஞ்ச நாளைக்கு வெளியில் எங்கையாவது இருங்கோ. பிறகு அமளி குறைந்ததற்குப் பிறகு வரலாம்'' எனத் தங்கலட்சுமி மாமி சாரதாவுக்குச் சொன்னுள் ''ஓம் அம்மா அப்படித்தான் செய்யவேண்டும். இல்லாவிட்டால் பிரச்னைதான்'' எனப் பதிலுக்குச் சாரதா சொன்னுள்.

ஒழுக்கக்கேடாகத் தாங்கள் நடந்துகொண்டு தன்னைக் கேடுகெட்டவளாகச் சமுதாயத்துக்குக் காட்ட முறபடுகின்ற இவர்களுடன் இனிமேல் இருப்பது தவறு என நினைத்த வசந்தமலர் விரைவாகச் செயல்பட்டாள்.

சங்கரனை எழுப்பிக்கொண்டு அந்த விடியற்காலையில் அவள் அந்த வீட்டைவிட்டு வெளியேறினுள்.

விடிந்தது

வசந்தமலரைக் காணவில்லை என எல்லோரும் அமளிப்பட்டுக்கொண்டு இருக்கும்போது தான்.

அங்கு

கந்தையர் வந்து சேர்ந்தார். மறுமணத்திற்கு வசந்தமலர் என்ன சொல்லுகின்ருளோ என நினைத்துக்கொண்டு வந்த அவருக்கு வசந்தமலரைக் காணவில்லை என்பது அதிர்ச்சியைக் கொடுத்தது.

''அவளைக் காணேல்லை. யாரோடை கூட்டிக்கொண்டு ஓடினுளோ தெரியாது'' எனத் தங்கலட்சுமி மாமி வெகு சாதாரணமாகச் சொன்னது கந்தையருக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது.

ஆனுலும் தனக்கு உண்டான ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினுர்.

இரவு நடந்த அசம்பாவிதங்கள் அவருக்குத் தெரிந்திருந்தாலும் விளக்கமாகத் தெரியவில்லை. ஏதோ பெரிய வேதனையைத் தாங்கிக்கொள்ள முடியாமல்தான் வசந்தமலர் போயிருக்கவேண்டும் என நினைத்துக்கொண்டு அவர் நடக்க ஆரம்பித்தார்.

தான் எடுத்துக்கொண்ட லட்சியம் நிறைவேருமல்போய் விடுமோ என அவர் கவலைப்பட்டார். வசந்தமலர் இந்தச் சமுதாயத்தால் சீரழியப் போகின்ருள் என நினைக்கும்போது வேதனை உண்டானது.

ஆழ்ந்த கவலையுடன் நீண்ட நேரமாக நடந்திருப்பார். ஒழுங்கைகள் தாண்டி தெருவுக்கும் வந்து பல மைல்தூரம் நடந்தார்.

பொழுது நன்ருகப் போய் விட்டது: உடலில் பலவீனம் கவ்விப் பிடித்தது. மேலும் நடக்கமுடியாதநிலை, தலைசுற்றுவதுபோல இருந்தது. நெஞ்சத்தில் மெல்லியதாகவலி. வசந்தமலரைச் சந்திக்காமல் தான் செத்துப்போய் விடுவேனே என அவர் நினைக்கும்போது கண்களில் கண்ணீர் அரும்பியது.

எப்போதோ சாக விரும்பிய அவருக்கு இப்போது வசந்தமலரைச் சந்திக்காமல் சாவது பிடிக்கவில்லை. ''கடவுளே அவளைச் சந்திக்கும் வரையிலாவது என் உயிரை வைத்திரு'' எனக் கடவுளை வேண்ட ஆரம்பித்தார்.

ஆனுல்

கண்கள் இருண்டு கொண்டு போனது. அவர் தடுமாறிக் கொண்டிருந்தார்.

''அப்பு'' என அவரை யாரோ பற்றிப்பிடிப்பது தெரிந்தது. சிரமத்துடன் பாரக்கும்போது வசந்தமலர் எதிரே நின்ருள்.

அந்த நேரத்திலும் மகிழ்ச்சி அவருக்கு உண்டானது. வசந்தமலருடன் ஏராளமாகக் கதைக்க விரும்பினுர், ஆனுல் அவரால் முடியவில்லை.

''பிள்ளை வசந்தமலர்! இன்னும் சில நிமிடங்கள் நான் உயிரோடு இருக்கமாட்டேன். சாகப்போகிற இந்தக் கிழவனின் கடைசி ஆசையை நீ நிறைவேற்றவேண்டும்.''

''அப்பு'' என விம்மினுள். வசந்தமலர்

''பிள்ளை நீ அழாதே ,,கட்டாயம் நீ மறுமணம் செய்ய வேணும். சந்தோஷமாக வாழ வேணும்'' என வார்த்தைகள் தடம்புரள கந்தையர் சொல்ல

''அப்பு அப்பு'' என வசந்தமலர் விம்மினுள்.

''சொல்லு பிள்ளை சம்மதம் என்று பொன்னுத்துரை மாஸ்டரும், பெண்சாதியும் ஏற்ற ஒழுங்குகளைச் செய்வினம்'' என விம்மினுர் கிழவர்.

''அப்பு'' என எதையுமே கூருமல் அழுதாள் வசந்தமலர் ''பிள்ளை ஓம் என்று சொல்லு நான் சாகப்போறன்'' எனக் கிழவர் திணறினுர்.

''அப்பு ஓம் அப்பு ஓம் அப்பு'' என வசந்தமலர் கதறும்போதே மெல்லிய புன்சிரிப்புடன் கிழவர் தரையில் சரிந்தார். அவரது உயிரோட்டம் நின்றுவிட்டது.

வறண்டு போயிருந்த வசந்தமலரின் வாழ்க்கையில் மீண்டும் வசந்தத்தை வரச் சம்மதத்தைப் பெறச் செய்துவிட்டுக் கிழவர் போய்விட்டார். ''அப்பு அப்பு'' என வசந்தமலர் அழுதுகொண்டிருக்கையில் பொன்னுத்துரை மாஸ்டரும் அவர் மனைவி பகவதியும் ஓடிவருவது தெரிந்தது.

(முற்றும்-யாவும் கற்பனை)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலாசாரக்குழு
வழங்கும்
மண் சுமந்த மேனியர் - 2
காலம்: 4-8-1986 மாலை 4-00 மணி
இடம்: தொழில் நுட்பக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.
நுழைவுச் சீட்டு ரூபா 5/-
கிடைக்குமிடம்:
வட்டுக்கோட்டை நவீனசந்தை
விற்பனை நிலையங்கள்
அன்று மண்டப நுழைவாயிலிலும் பெற்றுக்
கொள்ளலாம். (C-822)

G. C. E. (A/L) Aug 87 & 88
மீளப்பொருளியலும், செயல்முறை
வகுப்புக்களும்
மாலைநேர வகுப்புக்கள்
ஆரம்பம்:- 06-08-86
விபரங்கட்கு:
LADIES' ACADEMY
(Regd No. 15918)
Victoria Road [Near Subhas Tourist Hotel]
T'phone: 22365 JAFFNA [C 3838]

CITY & GUILDS OF LONDON
Exam 1986
ELECTRICAL ENGINEERING TECHNICIANS
பகுதி (I, II) பகுதி III
வகுப்புகள் 08-08-1986 அன்று மாலை
4-00 மணிக்கு ஆரம்பமாகும்.
Lecturer: K. CHANDIRABOSE T. Eng. (Lond)
கருணா கல்வி நிலையம்
(சந்திக்கு அருகாமையில்)
கே. கே எஸ். வீதி, சுன்னாகம்.
C 3804

ஹோம் பினான்ஸ் லிமிட்டட்
பாவித்த பழைய ரயர், ரியூப், மப்ளர், பாவித்து
உடைந்த ஸ்பிறிங் பிளேட்டுக்கள்,
டாடா பென்சில் பாவித்து கழித்த PARTS
சாமான்கள் விற்பனைக்கு விடப்படும். கிழமை நாட்
களில் 9-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை
பார்வையிடலாம்.
ஹோம் பினான்ஸ் லிமிட்டட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
Phone: 24310
[A 1018]

நெஸ்பிறே பருகி
வெற்றியீட்டுங்கள்!
ஒவ்வொரு பக்கெட்டிலும் அன்பளிப்பு...
புலமைப்பரிசில் வெல்வதற்கான வாய்ப்பு.




நெஸ்பிறே அருந்துவோரே!
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு நெஸ்பிறே, உடன் நெஸ்பிறே பக்கெட்டிலும் உங்களுக்கு இலவச அன்பளிப்பு. அத்துடன், ரூ. 10,000 பெறுமதியான புலமைப்பரிசில் ஒன்றை வெல்லும் அதிஷ்டம் உங்களுக்குக் கிடைக்கலாம்.

இலவச அன்பளிப்புகள்
விசேட ஊக்குவிப்பு விளம்பரத்தை முகப்பில் கொண்ட ஒவ்வொரு நெஸ்பிறே பக்கெட்டினுள்ளும் பின்வரும் இலவச அன்பளிப்புகளில் ஒன்று இருக்கும்: நான்கு அற்புதமான குறிப்பேடுகள் இரண்டு சிறந்த நிறப் பேனைக்கள்.

நெஸ்பிறே புலமைப்பரிசில்கள்
ஒவ்வொரு நெஸ்பிறே குறிப்பேட்டின் பின் அட்டை இடதுபக்க அடி மூலையிலும் 1,2,3, அல்லது 4 என்று இலக்கமிடப்பட்ட, கிழித்தெடுக்கக்கூடிய அடையாளத் துண்டுகள் உள்ளன. இவை நான்கையுமே சேகரித்து, உங்கள் பெயர், முகவரியை எழுதி, கூப்பனில் காணப்படும் வாக்கியத்தையும் பூர்த்திசெய்து பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.



நெஸ்பிறே புலமைப்பரிசில் போட்டி
த.பெ.எண் 189, கொழும்பு.

விதிகள்.
(அ) ஒருவர் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 1, 2, 3, 4 ஆகிய நான்கு இலக்க அடையாளத் துண்டுகளும் இணைக்கப்பட வேண்டும்.
(ஆ) விண்ணப்பங்கள் தனித்தனி உறைகளில் அனுப்பப்பட வேண்டும்.
(இ) போட்டி 1986 ஓகஸ்ட் 15 வரை நடைபெறும். ஆகவே, விண்ணப்பங்கள் அத்திகதியில் அல்லது அதற்கு முன்பு எமக்குக் கிடைக்க வேண்டும்.
(ஈ) வெற்றியீட்டும் 5 பேரைத் தெரிவுசெய்வதற்கான சீட்டிழுப்பு 1986 ஓகஸ்ட் 18 நடத்தப்பட்டு, முடிவுகள் இந்தப் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.
(உ) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது எவ்வித கடிதத் தொடர்புக்கும் இடமில்லை.
(ஊ) நெஸ்லே நிறுவனம், நியமிக்கப்பட்ட நெஸ்பிறே விற்பனை நிலையங்கள், தோமஸன் லங்கா தனியார் நிறுவனம் ஆகியவற்றின் ஊழியர்களும் குடும்பத்தினரும் தவிர்ந்த இலங்கையில் வாழும் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம்.

கூப்பன்:
பெயர்:
முகவரி:
நெஸ்பிறே-வாசகம்

வெல்லுங்கள்! ஒவ்வொன்றும் ரூ 10,000/- கொண்ட 5 புலமைப் பரிசில்கள்




நெஸ்பிறே-வளரும் பிள்ளைக்கு வளமூட்டும் பால்.
JWT NJL 1956 Licence No S 522
A 775

# இந்த வாரம் எப்படி?

## இன்று

மாதம்: ஆடி
திகதி: 18 (1986-08-3)
கிழமை: ஞாயிறு
திதி: திரயோதசி
மு.இ வரை
நக்ஷத்திரம்: திருவாதிரை
பி.ப.வரை

### மேடம்

கனிவான சம்பவங்கள் இடம் பெறும். இலாபகரமான தொழிலுக்கு முதலீடு செய்ய உகந்த நாள். சிலருக்கு பொது சனத் தலைமையும் கிட்டும். நன்னாள்.

### இடபம்

வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். பொருள் விரையத்திற்குமிடமேற்படும். குடும்பத்திலும் விவகாரங்கள் தலை தூக்கலாம். நிதானம் அவசியம்.

### மிதுனம்

ஏமாற்றம் தாக்கும். எதிர்பார்த்த முடிவில் தடைகள் ஏற்படும், உடல் நலமும் பாதிக்கப்படலாம் சுகாதாரம் நன்று.

### கடகம்

வாக்குப் பலத்தால் காரியத்தைச் சாதிப்பீர்கள். குடும்ப மகிழ்ச்சியும், குறிக்கோள் வெற்றிக்கும் இடமுண்டு. தெய்வ சிந்தையும் மேலோங்கி நிற்கும்.

### சிகம்

சகோதர மனஸ்தாபமுண்டு. நம்பிக்கை மோசடியும் நடக்கலாம் வீண் பேச்சுக்கிடமளியாமல் எவ்விடயத்திலும் நிதானப் புத்தியுடன்செயல்படவும்

### கன்னி

தாய்வழிப் பெருமையுண்டு. தன் தொழில் விருத்தியுண்டு. பூமியால் லாபமுண்டு. தரும காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

### துலாம்

எண்ணம் போல் யாவும் மலரும். வருமானத்திலும் அபிவிருத்தி காணப்படும் புத்திரர் மகிழ்ச்சியுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

### விருச்சிகம்

தொழில் மந்த நிலை காணப்படும். செலவுகளும் அதிகரிக்கும். பகை மூட்டம் தென்படும். பொறுமை விரும்பத்தக்கது

### தனுசு

களஸ்திர சுகமுண்டு கண்ணியம் சேரும் நன்மை பயக்கும். செய்தி ஒன்று கிட்டும் குடும்ப மகிழ்ச்சிக்குமிடமுண்டு.

### மகரம்

எதிர்பாராத விபத்தும் ஏற்பட இடமுண்டு குடும்ப பிளவுகள் தோன்றும். வீண பழிக்கும் ஆளாகுவீர்கள். அடக்கம் நன்று.

### கும்பம்

பிதாவழித் தனமும் சேரும். திடீர்ப் பிரயாணமும் ஏற்படும. தொழில நிலை மாற்றமும் ஏற்படலாம். தெய்வ வழிபாடு நன்று.

### மீனம்

இலட்சியப் பாதையில் வீறு நடை போடுவீர்கள். மனை வாழ்வும் கிட்டும். வாகன நலனுமுண்டு. வரவில் திருப்தியுமுண்டு. சுப தினம்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

## மானிப்பாய் கோவில் பற்று ப. நோ கூ. சங்கம்

## கேள்வி கோரல்

சங்கத்தில் உள்ள

1. கைத்தறித் தறிகள்
2. வெற்று பரல்கள்
3. பழுதடைந்த தளபாடங்கள்

விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரையிடப் பட்ட கேள்விகள் 09 8-86 வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பபத்திரங்களுக்கும் மேலதிக விபரங்களுக்கும் சங்க வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.

(A 946)

## இன்று 37-ம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

அரியாலை சன சமூக நிலைய 37வது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுனர் போட்டியும் இன்று நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சு. மோகனதாஸ் அவர்களும் திருமதி. புஸ்பராணி மோகனதாஸும் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் கனகரத்தினம் ம. ம. வித்தியாலய அதிபர் திரு. மு இராமலிங்கமுட்பட பல பிரமுகர்கள அழைக்கப்பட்டுள்ளனர். (ச)

## மட்டக்களப்புக்கு விசேஷ பஸ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு செல்லும் பிரயாணிகளின் நன்மை கருதி இன்று 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு விசேஷ பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பயணம் செய்ய விரும்புவோர் யாழ். பஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [சி - இ]

உதைபந்தாட்டம்:

## இன்று சாம்பியன் மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு.

யாழ். கல்வி இலாகாவின் அனுசரணையுடன் நடைபெறும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் 19வயதுப் பிரிவின் சாம்பியன் மோதல் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில நடைபெறவுள்ளது.

மேற்படி சாம்பியன் மோதலில் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதுகின்றன. இப்போட்டி இன்று மாலை 4மணிக்கு ஆரம்பமாகும். [வி]

## செபமாலை மாதா திருவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு.

சின்னமடு செபமாலை மாதா திருவிழா நாளைமறுதினம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

இதற்கான நவநாள் வழிபாடுகள் கடந்த மாதம் 27ம் திகதி ஆரம்பித்து தினமும் நடைபெற்றுவருகின்றன.

நாளைமாலை 6மணிககு திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெறும். [க]


## சித்திவிநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்.

நாவற்குழி சித்திவிநாயகர் ஆலய கொடியேற்ற உற்சவம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 13 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று 18ம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்த மகோற்சவமும் நடைபெறும்.

## ஒரு முன்னோடி இளைஞர்



மண்டைதீவு கிழக்கைச் சேர்ந்த செல்வன் விசுவநாதர் விமலநாதனின் அகாலமரணம் சமூகசேவையில் ஈடுபாடுடைய அனைவருக்கும் குறிப்பாக இளைஞர் சமூகத்திற்குப் பேரிழப்பாகும். இவ்விளைஞர் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினைத் தன் வாழ்க்கையில் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர். மாணவனாக இருந்த காலங்களில் தமிழர் விடுதலைக்கூட்டணியில் தம்மையும் இணைத்துக் கொண்டு இனம், மொழி, நாடு என்ற ஆர்வத்தோடு செயல்பட்டு மக்கள் மத்தியில் அன்பு, பண்பு முதலிய பெருங்குணங்களால் மக்களின் பெருமதிப்பைப் பெற்ற இவர், சிறந்த வவசாயியாகவும், சமூகசேவையாளனாகவும் வாழ்ந்தவர்.

மண்டைதீவிலிருந்து மலராத ஒருமொட்டினைப் பிடுங்கி வீசியதுபோல் இவரது அகால மரணம் அமைந்துவிட்டது. தீவுப்பகுதி ஓர் அருமைப்புதல்வனை இழந்து தவிக்கிறது. செல்வன் விமலநாதன் சொந்த முயற்சியினால் முன்னோடியாக வாழ்ந்து இளைஞர்களின் வழிகாட்டியாக வாழ்ந்து இவ்விளம் வயதில் இவ்வுலகை விட்டுத் திடீரென மறைவாரென எவருமே எதிர்பார்க்கவில்லை. அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

—இ. சிவச்செல்வன்

## முதலிலே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

நுணுவில் கிழக்கு சாவகச்சேரி தற்பொழுது யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த முருகேசு தம்பையா என்பவரின் மரணசாதன சொத்துகள் விடயமாக

— மரணமெய்தியவர்.

தம்பையா கைபெண் ராஜபூபதி 135, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். — மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் ரி/3979

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1986 ம் ஆண்டு ஆடி மாதம் 11-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1986-ம் ஆண்டு ஆடி மாதம் 28-ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைவு,
தி. ஜெகதீசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
[A988]


# MIDDLE EAST

வாய்ப்புக்கள்...... பொன்னான வாய்ப்புக்கள்......

இதோ... ஒரு அரிய சந்தர்ப்பம். மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லக்கூடிய மிக இலகுவழி வாய்ப்புக்களை பிரபல குவைட் தொழில் வல்லுனர் "அல் ஷாயிட்" உங்களுக்குத் தருகிறார்.

இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய

## EASY WAY TO GO ABROAD

வாய்ப்புக்கள் இப்பொழுது இலங்கையில்.....

......... பல்வேறு விதமான வாய்ப்புக்கள்... தகைமை வாய்ந்தோர் முதல்...... தகைமையற்ற தொழிலாளர் வரை, யாவருக்கும் உகந்த வாய்ப்புக்கள்.

★ மருத்துவத்துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Doctors, Lab - Technicians. X' Ray Technicians, Male and Female Nurses, Pharmacists Etc...

★ இன்ஜினியரிங் துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Engineers, Architects, Draughtsmen, Surveyors Etc .

★ அக்கவுண்டன்ஸி துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Accountants, Auditors, Book-Keepers, Account Clerks, Audit Clerks Etc...

★ HOTEL துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Receptionists, Cashiers, Bell-Boys, Room Boys, Room Maids Chefs Cook Helpers, Stewards, Barmen, Waiters, Dishwashers, Laundrymen, Doormen, Cleaners, Tailors, Barbers Etc...

★ SUPERMARKET தொழில் வாய்ப்புக்கள்... Managers, Supervisors, Salesmen, Salesgirls, Etc...

★ PRINTING துறையில் தொழில் வாய்ப்புக்கள்... Printers [Letter Press and Off-set], Machine minders, Binders Etc...

★ VETERINARIAN [FARM] Store keepers, Security Officers, Clerks, Steno-Typists, Typists, Office Boys, தொழில் வாய்ப்புக்கள்...

★ கார்பென்டர்ஸ், மேசன்ஸ், இலக்ட்ரீசியன்ஸ், பைப்-வேலையாட்கள் (Plumbers), பாரவாகன டிரைவர்ஸ் (Heavy Vehicle Drivers) தொழில் வாய்ப்புக்கள்.

★ இலவசமாகப் போகக்கூடிய ஹவுஸ்-மெய்ட், ஹவுஸ்போய்ஸ், ஹவுஸ் டிரைவர்ஸ், கப்பள்ஸ் (Couples) தொழில் வாய்ப்புக்கள்.

★ ஆங்கில அறிவில்லாதோர் அல்லது தொழில் அனுபவமில்லாதவர்கள் Factory / Farm லேபரர்ஸ்களாக, Airport / Hospital / Municipal கிளீனர்ஸ்களாக, சுப்பர் மார்க்கெட்டில் பொருள் அடுக்குபவர்களாக, (Shelf Filler), பார்சல் கட்டுபவர்களாக (Packers), போட்டர்ஸ் (Porters)களாக செல்லக்கூடிய தொழில் வாய்ப்புக்கள்...

இலங்கை நாணயப்படி ரூபா 3000/- முதல் ரூபா 35000/-வரை மாதம் சம்பாதிக்கக்கூடிய தொழில் வாய்ப்புக்கள்.

30 நாட்கள் முதல் 45 நாட்களுக்குள் போகக்கூடிய தொழில் வாய்ப்புக்கள்,

திறமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட, வயது வரம்பில்லாத வாய்ப்புக்கள்.

பணம் கொடுத்து ஏமாற தேவையில்லா இலவச வாய்ப்புக்கள்.

பல்வேறு பொன்னான வாய்ப்புக்கள். இன்றே விரையுங்கள். நாளை நாளை என்று காத்திருக்காது இன்றே விரையுங்கள் ஒருவேளை நாளை - அல் ஷாயிட்டின்-இந்த வாய்ப்புக்கள் உங்களுக்கு கிடைக்காது போகலாம்.

அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பபத்திரம், விபரக்கைநூல் விளக்கப்பிரதி ஆகிய வற்றைப்பெற ரூபா 150/- மணியோடர் மூலம் எங்களுக்கு அனுப்பவும். தபால் செலவு இலவசம் மணியோடரில் போஸ்ட ஆபிசைக் குறிக்கும் இடத்தில் G. P. O — Colombo என எழுதவும். அத்துடன் உங்கள் விலாசத்தையும் எமக்கு தெளிவாக தரவும்.

## Transworld Associates, Kuwait

அனுசரணையுடன்-இலங்கையில்...

# TEAMS (LANKA) ENTERPRISES,

P. O. BOX: 1910, COLOMBO, Sri Lanka.

(குவைட் ஸ்தாபன அங்கீகாரத்துடன்)

Labour Licence No. 438,
Labour Dept Approval
No. AL / 438 / 1 / 2 / 3 / 85
AL / 438 / 4 / 86.

(A 996)



## தெல்லிப்பளை மக்களுக்கோர் நற்செய்தி

நீங்கள் கோழி வளர்க்கிறீகளா !
உங்களுக்கு தேவையான

துர்க்கா முட்டையிடும் கோழித்தீன்
துர்க்கா குஞ்சுக்குரிய கோழித்தீன்
துர்க்கா இறைச்சிக்குரிய கோழித்தீன்

ஆகியவற்றை பெற்றுக்கொள்ள இடம்

No. 10, ஸ்ரேஷன் றேட்,
தெல்லிப்பளை,

A 1024

# 8மாத இடைவெளியின் பின் யாழ். நோக்கி உரக்கப்பல்

யாழ்ப்பாணம், ஞாயிறு
காங்கேசன்துறை துறைமுகத்துக்கு 2,500 மெற்றிக் தொன் உரத்தோடு கொழும்பிலிருந்து எதிர்வரும் 5ம் திகதி கப்பல் ஒன்று வரவுள்ளது.

85 நவம்பரில் மட்டும் ஒரு உரக்கப்பல் யாழ் மாவட்டத்துக்கென வந்தது. அதன் பின்னர் 8 மாதம் கழித்து இக் கப்பல் வருகிறது.

இக்கப்பலில் வரும் உரத்தை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு ப. நோ. கூ. சங்கங்கள் மற்றும் கமத்தொழில் சேவை நிலையங்கள், உத்தரவு பெற்ற தனியார் வியாபாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் உரக் கூட்டுத்தாபன வடபகுதிப்பொறுப்பதிகாரி திரு. எஸ். இராமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். அரசங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி பாலசிங்கம் ஆகியோர் இவ்வுரக்கப்பல் வருவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளதாகவும அவ்வதிகாரி தெரிவித்தார்.

இக் கப்பலில் வரவுள்ள உரம் இப்பொழுது மேற்கொண்டுள்ள காலபோக விவசாயச் செய்கைக்கு போதுமானதாக இருக்கிறது என்றும் மேலும் தேவையான உரவகைகளைப் பெறுவதற்கு ப. நோ. கூ. சங்கங்கள் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அவ்வதிகாரி கேட்டுள்ளார். (மா)

## விபத்தில் இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
கண்ணாடியுடன் சைக்கில முன் பக்கத்தில் அமர்ந்து வந்த இளைஞர் ஒருவர் விபத்துக்குள்ளாகி மரண மடைந்துள்ளார்

இச் சம்பவம் நேற்று மாலை யாழ் வின்ஸர் தியேட்டர் சந்தியில் நடைபெற்றது யாழ் பிரதான வீதியைச் சேர்ந்தசுரேந்திரன் (வயது 16) என்னும் இளைஞரே பலியானவராவார். (மா - இ)

## கைது

வவனியா, சனி
சொந்தக் கடமையின் நிமித்தம் வவனியா நகருக்கு வந்த ஒருவர் வவனியா கச்சேரி தடை முகாமடியில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# 'நிர்வாகப் பரவலாக்கம் நாட்டைப் பிரிப்பதாகாது'

கொழும்பு, சனி
"தத்தமது பிரதேசங்களில் தாமே பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் நிர்வாகப் பரவலாக்கம் இடம் பெற வேண்டும். தமிழர்களும் முஸ்லிம்களும் தாம் வாழும் பிரதேசங்களை நிர்வகிக்கும் பொழுது அது நாட்டைப் பிரித்தல் என்பதல்ல".

இவ்வாறு பிரதி நீதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜா செங்கடகலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் அவர் பேசுகையில் கூறியதாவது:

வடக்கு கிழக்கு பிரதேச மக்கள் தம்மை அரசு பாரபட்சம் காட்டி நடாத்தி வருவதாக கூறுகிறார்கள் இதனை நாம் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் வாழும் எவருக்காவது இன, மத, ரீதியில் அநீதி இழைக்கப்படுமானால் அதனை நாம் கட்டாயமாக மாற்றியமைக்க வேண்டும்.

"இந்த நாட்டில் வாழும் அனைத்து மதத்தை சார்ந்த மக்களுக்கும் பூரண உரிமை உள்ளது என அரசியல் சாசனத்தில் கூறப்பட்ட போதும் இன்று தமிழர் ஒருவர் தொழிலொன்றைப் பெற முடியாத நிலையும் இந் நாட்டிலேயே உள்ளது அதற்காக அவர்கள் படும் சஷ்ரங்கள், சிரமங்கள் பிரச்னைகள் காரணமாகவே நாட்டில் இனப்பிரச்னை விஸ்வரூபம் எடுத்துள்ளது".

"நாட்டின் நலனுக்காக இன்று தோட்டங்களில் உழைக்கும் மக்கள் இங்கு இரண்டு பரம்பரைகளாக வாழ்ந்து வருகிறார்கள் அவர்களுக்கு பிரஜா உரிமை வழங்குவது தவறு அவர்களும் எம்மவர்கள்தானே.

"சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்துக்கு எமது நாடும் கையெழுத்திட்டுள்ளது. அரசியல் ரீதியாக ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டால் மனித உரிமை மீறல் தொடர்பாக அவர் உயர் நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்யலாம்". (சி - எ)

## சிக்கினார்

யாழ்ப்பாணம் ஞாயிறு
மினிபஸ்ஸில் வைக்கப்பட்டிருந்த டணப்பையை திருடிய ஒருவர் கையுமெய்யுமாக அகப்பட்டார்.

யாழ் பஸ்நிலையத்தில் தனியார் பஸ் ஒன்றிலேயே இத் திருட்டு சமபவம் நேற்று இடம்பெற்றது பிடிபட்ட நபர் விசாரணைக்கென கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

# 'மாகாண சபைத்திட்டம் நிறைவேறியேதீரும்'

கொழும்பு, சனி
"ஜனாதிபதி இம்மாதம் நடுப்பகுதியில் உத்தேச மாகாண சபை சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் போகிறார், இத்திட்டத்தை எவர் எதிர்த்தாலும் நிறைவேற்றியே தீருவார்"

இவ்வாறு கண்டி மாவட்ட அமைச்சர் திரு டபிள்யூ. பி. திசநாயக்கா புசல்லாவ சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்து பேசுகையில்; பலகாலமாக இந்நாட்டில் ஒற்றுமையாக வாழந்து வரும் தமிழ் சிங்கள மக்கள் தொடர்ந்தும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டி வருவது இந்நாட்டிற்கு பெரும் அழிவை ஏற்படுத்துமென்றார்.

இனப்பிரச்னைக்கு தீர்வு காண ஜனாதிபதி அனைத்துக் கட்சியையும் அழைத்துப் பேச்சு நடத்தியபோது எதிர்க் கட்சியும் மற்றுமொருகட்சியும் சமூகந்தரவில்லை என்றுஅவர் கூறியபேச்சுவார்த்தை வெற்றி பெற்றால் தமது அரசியல் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வந்துவிடுமோ எனப்பயந்தே அவர்கள் இதனைவெறுக்கின்றனர் என்றார். (சி.எ)

## தோல்வியில் முடிந்தது

ஹட்டன் சனி.
மாகாண சபைத் தீர்வினை எதிர்த்து ஹட்டன் பிரதேசத்தில் நடத்தப்படவிருந்த ஊர்வலமும், எதிர்ப்புக்கூட்டமும் தோல்வியில் முடிவுற்றுள்ளது. பௌத்த பிக்குகளாலும், சிங்களவர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த எதிர்ப்புத்தினத்துக்கு அனுமதியும் மறுக்கப்பட்டதாக கூறப்படுகிறது

இதனைத் தொடர்ந்து (12ம் பக்கம் பார்க்க)

## பசுக்களுக்கு சிகிச்சை

அராலி, சனி.
அராலி தெற்கு கிராமோலை கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் இயங்கிவரும் செயற்கைமுறைச் சினைப்படுத்தும் நிலையத்தில் எதிர்வரும் 5-ந் திகதி செயற்கை முறையில் சினைப்படுத்திய பசுக்களை சோதனையிடுதலும், சினை யுற்ற பிரச்னையுள்ள பசுக்களுக்கு சிகிச்சையும் நடைபெறவுள்ளதாக இந்நிலைய பொறுப்பதிகாரி திரு ந விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

## நீதிவிசாரணைக்கு கோரிக்கை

வவனியா, சனி
வவனியா சாத்திரி கூளாம் குளம் பகுதியில் கடந்தபுதன் கிழமை விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட மூவரின் கொலைச்சம்பவம் தொடர்பாக நீதி விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்என்று வவனியா மாவட்ட பிரஜைகள் குழுவினர் இ. தொ. காங்கிரஸ் பிரமுகர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (வா)

## கூட்டணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கொள்வதற்கான அதிகாரங்கள் மாநில அரசிடமே இருக்க வேண்டும்.

இவ்வாறான ஆலோசனையை த. வி. கூட்டணி இந்திய அரசியல் சாசன நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப் பட்டுவரும் மாகாண அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான உத்தேச நகல் சட்ட மூலத்திற்கு வழங்கியுள்ளது. (சி - எ)

## இடமாற்றம்

சாவகச்சேரி, சனி
கிளிநொச்சி அகதிகளுக்கென கைதடி வெளிகள நிலையத்தில் அறவழிப் போராட்டக்குழு நடாத்தி வருகின்ற அகதிகள் முகாம் இம்மாதம் 7ம் திகதி முதல் கைதடி - நுணாவில் பகுதிக்கு மாற்றப்படவுள்ளது.

இம் மக்களுக்கெனக் குழு பல்கலைக்கழக மாணவர் அவையின் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புதிய இருப்பிடங்களில் இக் குடும்பங்களைத் தங்க வைக்க ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

## விழிப்புக்குழுவினால் திருடர் தொல்லை குறைவு!

சாவகச்சேரி, சனி.
மட்டுவில் கல்வயல் பகுதிகளில் தீவிரமாக இருந்த திருடர் நடமாட்டம் மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா சன சமூக நிலையத்தினரின் விழிப்புக்குழுச்சேவையினால் பெருமளவு குறைந்துள்ளது.

விழிப்புக்குழுவின் சேவையினை இப்பகுதிப் பொதுமக்கள் மிகவும பாராட்டி ஊக்கப்படுத்தி வருகின்றனர். (ஒ-ஊ)

## நோயாளர் நலன்புரிச்சங்க தகவல் நிலையம்

புலோலி, சனி
பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் "வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்க தகவல் நிலையம்" பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியும் மகப்பேறு வைத்திய புனருமான டாக்டர் ஆர் குழந்தைவடிவேலினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது

இத் திறப்பு விழா பருத்திதுறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். கே. லலிதகுமார் தலைமையில் நடைபெற்றது. (எ)

## அமைச்சரின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டல் உரிமையாளர்), எரிபொருள் நிலைய உரிமையாளர் நடரஜா, விசாய உத்தியோகத்தர் குணபாலசிங்கம், ஆசிரியர் சிவலிங்கம் (சித்தாண்டி), கிராம சேவை அலுவலர் தங்கவேலு உட்பட பலர் கடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சரின் வைபவங்கள் இடம் பெற்றது தெரிந்ததே (மா)

## கிழக்கில்..

(1ம் பக்கத்தொடர்ச்சி)
டத்தில் பல்வேறு பாகங்களிலும் ஆயுதப்படை முகாம்கள் தோன்றியுள்ளன. ஆங்காங்கேயிருந்து நினைத்த மாத்திரத்தில் கிளம்பும் படையினர் தாங்கள் மனம் போனபடி நாளாந்தம் தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர்.

எங்கே? எப்போது? என்ன நடைபெறுகிற தென்பதை யாராலும் அறிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ முடிவதில்லை.

தீவிரவாத இளைஞர்கள் எவ்விததாக்குதல் நடவடிக்கைளிலும் ஈடுபடாமல் இருக்கும் போதே இங்கு பெரும்பாலான தாக்குதல் நடவடிக்கைளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனை உடனடியக தடுத்து நிறுத்த ஜனாதிபதியுடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்

இப்படி இங்குநடைபெறுகிற போக்கு தொடர்ந்து நீடிக்குமானால் பேச்சுவார்த்தைகளில் இப்பகுதி மக்களுக்கு நம்பிக்கையற்றுப் போய்விடும் விரக்தி மனம்பான்மையுடன் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். (மா)

## களுவங்கேணியில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வாடிகளிலிருந்தவர்களை வெளியேற்றிவிட்டும், வெளியார் எவரும் கடற்கரையை நெருங்காதவாறும் படையினர் தடுத்து வைத்துக்கொண்டும் மீன் வாடிகளுக்குத் தீ வைத்தனர்.

மீன்வாடிகள் முற்றாகஎரிந்து சாம்பரனதுடன் அவ்வாடிகளுக்குள்ளிருந்த உணவுப் பொருள்கள், தளபாடங்கள், சமையல் பாத்திரங்கள், வலைகள் ஆகியனவும் எரிந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தால் நிர்க்கதிக்குள்ளான கடற்றொழிலாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபையின் முன்னாள் தலைவர் திரு. சி. சம்பந்தமூர்த்தியிடம் முறையிட்டுள்ளனர். இவர் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்துவிடம் புகார் செய்துள்ளார். (மா)

லிடோ
காலை 10-30, 2-30, 6-30
பாண்டியன்—ரேவதி
நடித்த
புதுமைப் பெண்
[புதிய பிரதி கலர்]

வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள்,
தந்திர காட்சிகள்,
நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா
வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து
தருவிக்கப்பட்டது.

— முடிவு திகதி நீடிப்பு —

'ஈழநாடு' அனுசரணையுடன்
யாழ். இலக்கிய வட்டம் நடாத்தும்
மதுரகவி

## இ. நாகராஜன் நினைவுக் குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டி

முதலாம் பரிசு - ரூபா 300-00
இரண்டாம் பரிசு - ரூபா 200-00

நிபந்தனைகள்:-

★ பல்வேறுபட்ட பதினாறு தலைப்புகளில் குழந்தைப் பாடல்கள் ஒவ்வொன்றும் பதினாறு வரிகளுக்கு மேற்படாதிருக்கவேண்டும்.

★ தழுவல், மொழிபெயர்ப்பு. ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

★ போட்டியாளர் தனது பெயர், முகவரி முதலியவற்றைத் தனித்தாளில் எழுதி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

★ நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

★ முடிவு திகதி:- 31-08-1986

★ கவிதைகள் தபாலில் மட்டுமே அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மதுரகவி இ நாகராஜன் நினைவுக் குழந்தைப் பாடல் போட்டி எனக் குறிப்பிடல் வேண்டும்.

★ கவிதைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
'ஈழநாடு' வாரமலர்,
த. பெ. இல. 49,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 3-8-86

# அரசின் ஆலோசனையில் சமஷ்டி ஆட்சிக்கு எவ்விதத்திலும் இடமில்லை

## - லலித்

கொழும்பு, சனி

''அதிகாரத்தைப் பரவலாக்கும் அரசின் ஆலோசனைகள் ஐக்கிய இலங்கையை ஆதாரமாகக் கொண்டது. சமஷ்டி ஆட்சிக்கு எந்தவிதத்திலும் இடமளிக்கப்படமாட்டாது'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மாத்தளையில் இன்று நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையில் கூறினர்.

தொடர்ந்து பேசிய அமைச்சர் திரு. அத்துலத்முதலி, சமஷ்டி ஆட்சியில் பரவலாக்கல் அதிகாரங்களை அந்தந்தப் பகுதி மக்களின் இணக்கமின்றி வாபஸ்பெறமுடியாது. ஆனல் தேவையேற்பட்டால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தால் பரவலாக்கல் அதிகாரங்களை அரசு பரவலாக்கக் கூடியதாக உள்ளது என்றார்.

''எந்தவொரு அபிவிருத்தி சபையாவது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தால் ஆளுநர் ஆட்சியை அங்கு ஏற்படுத்த படியும்'' என்று கூறிய அமைச்சர் 'தேசிய கொள்கைகளை வலுப்படுத்துவது மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் அமையும் என்றார். (எ)

## 3 மைல் செல்ல 30 நாட்கள்!

மானிப்பாய், சனி.

மானிப்பாய் வட்டாரத்தைச்சேர்ந்த ஆசிரியர் ஒருவர் லீவு விண்ணப்பம் கோரி தாம் கடமையாற்றும் பாடசாலைக்கு அனுப்பிவைத்த தந்தி முப்பது நாட்களுக்குப் பின்னர் தான் குறிப்பிட்ட பாடசாலையைச் சென்றடைந்துள்ளது.

இந்த ஆசிரியர் தந்தி அனுப்பிய தபாற்கந்தோருக்கும் பாடசாலைக்குமிடையே உள்ள தூரம் மூன்று மைல்கள்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ)

## இடம்பெயர்ந்த அகதிகள்

கொழும்பு, சனி

வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளை மீண்டும் அவர்கள் இடங்களில் குடியேற்றுவதற்கான திட்டங்கள் குறித்து எதிர்வரும் 5ம் திகதி திங்கள் கிழமை கொழும்பில் ஆராயப்படவுள்ளது. (சி)

## யாழ்.கலை மரபைப் பேணுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்

யாழ்ப்பாணம் ஞாயிறு

''சாகித்திய மண்டலப பரிசு பெற்ற எழுத்தாளரும் கல்விமானுமாகிய திரு. சண்முகசுந்தரம், மரபுவழி இலக்கியத் துறையில் மாத்திரமன்றி நவீன படைப்பிலக்கியத்துறையிலும் ஈடுபாடுகொண்டு இடையருது எழுதிவந்தார். அவரது மறைவு தமிழ் இலக்கியத் துறைக்கு ஓர் இழப்பாகும்''

இவ்வாறு கல்விமானும் எழுத்தாளருமான த. சண்முகசுந்தரத்தின் மறைவு குறித்து தமிழ்க் கதைஞர் வட்டம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளது,

அச்செய்தியில், ''யாழ்ப்பாணக் கலைமரபைப் பேணவேண்டும் என்பதில் அவருக்குப் பெரும்ஆர்வம் இருந்தது. அவரது ஆழ்ந்தகன்ற அறிவுவளம் அவரது எழுத்திலும் பேச்சிலும் பளிச்சிடும் தமிழ்க் கதைஞர்வட்டத்தில் திரு சண்முகசுந்தரம் பதவி வகித்த காலத்தில் அதன்பணிகளில் ஆர்வத்துடன் செயற்பட்டார். இன்னும் பல ஆண்டுகளில் வாழ்ந்து தமிழ் இலக்கியத்துக்கு வளமூட்டியிருக்க வேண்டிய கல்விமான சண்முகசுந்தரம் அவர்களின மறைவு தமிழ் இலக்கியத்துறைக்கு ஓர் இழப்பாகும்''என்று மேலுங்கு றிப்பிடப்பட்டுள்ளது. (ஊ)

## 83 கலவரங்கள்

# ''பாதிக்கப்பட்ட இந்தியர்க்கு நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது''

## அமைச்சர்சிவ்சங்கர்

(புதுடில்லி)

83-ம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கையில் நடந்த இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட இந்திய பிரஜைகள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து இந்திய தூதுவராலய கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து பாதிக்கப்பட்ட இந்தியப் பிரஜைகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டுமென இலங்கை அரசைக் கேட்டுக்கொண்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சிவ்சங்கர் தெரிவித்துள்ளார். ராஜீயசபாவில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்

இந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் சிலருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ள போதிலும் பாதிக்கப்பட்ட இந்தியப் பிரஜைகள் எவருக்கும் இலங்கை அரசு உதவித் தொகை வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். [ஒ-ஊ]

## கட்டாய உத்தரவு

வவனியா, சனி

வவனியாவிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் இ.போ.ச. பஸ் உட்பட சகல தனியார் வாகனங்களும் கிளிநொச்சியூடாகவே செல்ல வேண்டும் என்று வவனியா பொலிஸார் கட்டாய உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளனர்.

நெடுங்கேணியூடாக யாழ்ப்பாணம் செல்லக்கூடாதெனவும் பொலிஸாரினல் அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது(வா-இ)

## தோல்வி---

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த விகாரைகளிலும், மறைமுகமாகசிங்களவர்களின் கடைகளிலுமாக சிறு சிறு கூட்டங்கள் மாத்திரமே நடத்தப்பட்டன. (மா)

# ''அரசின் திட்டத்தால் நாடு ஒன்பது மாகாண அரசாக பிளவுபடும்''

## - சிறிமாவோ

கொழும்பு, சனி.

''மாகாண சபைகள் உருவாக்கப்படுவதை நான் எதிர்க்கிறேன் இந்த நடவடிக்கையால் நாடு மேலும் பலவீனப்படும். இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாடு ஒன்பது மாகாண அரசாக பிரிவுபடும். இதனல் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு பங்கமேற்படும்.''

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா களனியில் நடைபெற்ற சுதந்திரக்கட்சி கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

மேலும் அவர்கூறியதாவது:

''நான் இங்கு சுதந்திரக் கட்சியின்சார்பில் உரையாற்ற வரவில்லை தேசாபிமானமுள்ள சிங்கள மக்களை ஒன்றுசேர்த்து எமது நாட்டைக் காப்பாற்றப் போராடவே வந்துள்ளேன். சிங்கள மக்களின் ஒற்றுமையே பிரச்சினைக்கு சுமுகத் தீர்வுகாண்பதில் உதவும்.

''எனக்கோர் வாய்ப்புஅளிக்கப்பட்டால்நான் இந்நாட்டை நிச்சயம் மீட்டெடுப்பேன். நான் இந்த நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் எந்தத் தியாகத்தையும் செய்வேன் எனது இப்பணிக்கான முயற்சிகளுக்கு மகா சங்கத்தினரதும் ஒத்துழைப்புத் தேவை.

''ஒவ்வொரு மாகாணத்துக்கும் கவர்னர், முதலமைச்சர், மந்திரிசபை, மற்றும் பொலிஸ் படைகள் தெரிவுசெய்யப்படுவதால் நாட்டின் ஒற்றுமை பிரிக்கப்படுவதுடன் நிதி நிலையில் பெருமளவு நெருக்கடியும் ஏற்படும்.'' [சி-இ]

## மரண அறிவித்தல்

### செல்வன் கு. சுரேந்திரகுமார்

செல்வன் கு. சுரேந்திரகுமார் காலமானர். இவர் காலஞ்சென்ற திரு. குணமணி (சற்குணம்ஸ் ஸ்ரூடியோ முன்னாள் உரிமையாளர்) திருமதி தங்கமணியின் அன்பு மகனும், சுகுணு, ராஜேந்திரகுமார், ராஜ்குமார், விஜேயந்திரகுமார், சுகந்தினி, சுகந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 3-8-86 ஞாயிற்றுக்கிழமை பி ப. 2 மணியளவில் 137, பிரதானவீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C3862) S. A. றிச்சேட்

### திரு. சுப்பையா இராமசாமி

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இராமசாமி 2-8-86 அன்று காலமானர். அன்னர் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை, இரத்தினம், அருணசலம், சிவசம்பு, காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிருஷ்ணபிள்ளை, (இளைப்பாறிய ஆசிரியர்.) திருமகி),. நித்தியலெட்சுமி [இளைப்பாறிய ஆசிரியை], நித்தியானந்தன். [கணக்காளர், அவுஸ்திரேலியா] பூபாலபுண்ணியசிங்கம் [குடியேற்றத்திட்ட அதிகாரி, கிளிநொச்சி], திருமதி சுந்தராம்பாள் [ஆசிரியை, வேலணை ம ம வி ], திருமதி ஸ்ரீமகாலெட்சுமி [ஆசிரியை], விவேகானந்தன் [ரயர்கூட்டுத் தாபனம், களனி,] அசோகன் [அசோக்ஸ் எக்ஸ்போட் லிமிற்றற் உரிமையாளர்] ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி அரியநாகேஸ்வரி, சதாசிவம் [கணக்காளர், சம்பியா], பத்மராணி (கணக்காளர், அவுஸ்ரேலியா], ஜெகதாம்பாள், கேதாரநாதன் [ஆசிரியர், நாகேஸ்வரி ம.வி ], சுந்தரலிங்கம் [V M R and Co உரிமையாளர்], தெய்வநாயகி, காமினி ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 4-8-86 திங்கள காலை 1.00 மணியளவில் கரம்பனில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [C 3861]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டட்ஸ் தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram. Eelanadu. Teiephone 22389 24126.

## மரண அறிவித்தல்

### திரு. தம்பையா சரவணபவான் (Retd C. C. S.)

மாவிட்டபுரம் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த தம்பையா சரவணபவான் காலமானர். அன்னர் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும், விமலராஜா (Manager Leela Engineering Works), ஜெகதீசன் (Manager Office Equipment Ltd Jaffna), ஸ்ரீகணநாதன (Partner Ford Rhoder Thornton and Co) ஆகியோரின் அருமைத் தந்தையும், இளவாலை T. T. கனகராயரின் சகோதரரும், ஆ. கிருஷ்ணசாமியின் (Retd Post Master) மைத்துனருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 02-08-86 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. ஜெகதீசன்.

C 3848

### திரு. J. S. S. ஆனந்தம்

கோப்பாயைச் சேர்ந்த முன்னாள் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு J. S. S ஆனந்தம் அவர்கள் 31-7-86 அன்று சென்னையில் காலமானர். அன்னர் இராசநாயகியின் அன்புக்கணவரும், கோமதி கோமகன் (U K), இளங்கோவன் (U. K), சுமதி (Madras), லஷ்மன் (Madras) ஆகியோரின் அன்புத் தந்தையும், நரேன்மேதர் (Engineer Guyank) அவர்களின் அன்பு மாமனரும், ஜெகநந்தின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற V. K. செல்லையா திருமதி செல்லையாவின அன்புமருமகனும், காலஞ்சென்ற S.R. ராசையா, V S. ராஜரட்ணம் சேதுகுமரையா ஆகியோரின் அன்புச்சகோதரனும், தவசிங்கம் (U K) குலசிங்கம் (California), தேவபாலசிங்கம (சரவெட்டி) அற்புதசிங்கம் (கட்டுநாயக்க) திருமதிகள் அருமைநாயகம், Andrew ஆகியோரின் அன்புமைத்துனருமாவார். அன்னரின் ஆத்மாசாந்திக்காக அவரது இல்லத்தில் 4-8-86 திங்கள் மாலை 4-00 மணிக்கு ஒரு ஆராதனை நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

கோவை,
கோப்பாய்வடக்கு,
கோப்பாய். (C3850)

### இராசநாயகம் புஷ்பம் (இராசலட்சுமி)

காலஞ்சென்ற இராசநாயகம் அவர்களின் அன்பு மனைவி புஷ்பம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னர் துரைநாயகம், இரத்தினநாயகம், யோகநாயகம், கருணைநாயகம், செல்வநாயகி [செல்வதி] ஆகியோரது அன்புத்தாயாரும், நடராஜா, இரத்தினம்பிகை, செல்வநாயகி, லக்சுமிதேவி, லிர்மலாதேவி (Sponds) ஆகியோரது அன்பு மாமியாரும், சிவசங்கர், ஹரிஹரன், கஜேந்திரன், றஜனி, பிரதீபா, லோஜினி, சுமதி, ஹம்சா ஆகியோரது அன்புப்பாட்டியுமாவார். அன்னரது இறுதிச்சடங்குகள் இல. 405, கோவில் வீதி நல்லூரில் நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு 3-8-86 இன்று மாலை 3 00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C 3858) இ. துரைநாயகம்.